(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 3(2).]

# பாராளுமன்றம்

## 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2011, மே 06, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2011, மே 25, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0317/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டியதாக உள்ள மொத்த தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) இலங்கை மின்சார சபைக்கான பத்து பெரிய கடன்பட்டோரின் பெயர்களையும்,

(iii) உயர்ந்த கடன் காரணமாக CEB ஆல் பெறப்பட்ட கடன்களுக்காக செலுத்த வேண்டிய வட்டியையும்,

(iv) இந்த நிலைமையை சமாளிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கையையும்,

(v) கடன் கொடுத்தோருக்கு இலங்கை மின்சாரசபை செலுத்தவேண்டியுள்ள தொகையையும்,

(vi) இலங்கை மின்சார சபையின் மிகப்பெரிய கடன் கொடுத்தோர் பத்து பேரின் பெயர்களையும்,

(vii) கடந்த ஆறு வருடங்களாக அப்பணம் செலுத்தப்பட வேண்டிய திகதிகளையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இலங்கை மின்சாரசபையின் செயல்திறன் இன்மையும், அதன் உயர்ந்தளவு கடன்களுமே உயர்ந்த மின்கட்டணங்களுக்கும் எரிபொருள் விலைகளுக்குமான காரணங்களாகும் என்பது சரியானதா?

(இ) (i) இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் மீது ச.நா.நி இனால் பிரகடனப்படுத்தப்பட்ட நிபந்தனைகளையும்,

(ii) அந் நிபந்தனைகளை இலங்கை மின்சாரசபையும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் நிறைவேற்றப் போகின்றனவா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0816/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் மாத்தறை வலயக் கல்வி காரியாலயத்திற்குரிய மாத்தறை கோட்டக்கல்வி அலுவலகத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) இப்பாடசாலைகளில் நூறு மாணவர்களுக்குக் குறைவாக உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) நூறு மாணவர்களுக்குக் குறைவாக உள்ள பாடசாலைகளில் மூடுவதற்காக தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்தில் ஆசிரியர் மிகை நிலவுகின்ற பாடசாலைகள் உள்ளனவா என்பதையும்,

(ii) ஆசிரியர் மிகை நிலவுகின்ற பாடங்கள் யாவையென்பதையும்,

(iii) இப்பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iv) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடங்கள் யாவையென்பதையும்,

(vi) இவ்வாசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vii) ஆமெனில், இதற்காக எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்,

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0900/ '10

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஊவா மூலதன கூட்டுறவுச் சங்கத்தின் (ஊவா மூலதன கூட்டுறவு வங்கி) பணிப்பாளர் சபை கூட்டுறவுச் சட்டத்துக்கமைய நியமிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) இப்பணிப்பாளர் சபை நியமிக்கப்படுகையில் சட்டபூர்வமாக செயற்குழுக் கூட்டங்களும் பொதுச் சபைக் கூட்டங்களும் நடாத்தப்பட்டிருந்ததா என்பதையும்,

(iii) இக்கூட்டுறவு சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் நடாத்தப்பட்ட இடமும் திகதியும் யாது என்பதையும்,

(iv) இக்கூட்டுறவுச் சங்கத்திலிருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்,

(v) இவர்களின் பெயர் மற்றும் முகவரிகள் யாவைஎன்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஊவா மூலதன கூட்டுறவுச் சங்கத்தின் தற்போதைய தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) இதன் பொது முகாமையாளரினதும் நிறைவேற்று உத்தியோகத்தர்களினதும் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இக்கூட்டுறவுச் சங்க வங்கியின் முன்னாள் தலைவர் மற்றும் தற்போதைய தலைவர் ஆகியோர் சகோதரர்களென்பதையும்,

(ii) இதன் பொது முகாமையாளர் முன்னாள் தலைவரின் மனைவி என்பதையும்,

(iii) இங்கு நடைபெற்றுள்ள ஊழல்கள் மற்றும் மோசடிகள் தொடர்பாக கணக்காய்வு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) மேலே (இ) (iii) இல் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அறிக்கையின்படி சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0978/ '10

கௌரவ எம்.ரி. ஹசன் அலி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கொழும்பு மாநகர சபையின் உதவி உருக்கி ஒட்டுநர் பதவியை வகித்துக்கொண்டிருந்த போது 2008.11.20 ஆம் திகதி ஓய்வுபெற்ற திரு. ஏ.எச்.எம். மஹ்ருபுக்கு ஓய்வூதியப் பிரமாணங்களின் அடிப்படையில் வழங்கப்படும் கொடைகள் மற்றும் ஓய்வூதியத்தைக் கணிப்பிடுகையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் ( HRC/2505/05ஆம் 2007/06/14ஆம் திகதி) வழங்கப்பட்டுள்ள கட்டளைக்கமைய, 1989/4/27 திகதி தொடக்கம் உதவி உருக்கி ஒட்டுநர் பதவியில் நிரந்தர ஊழியராகவும் 1989 தொடக்கம் பயிற்சி I வகுப்பில் தரம் II உருக்கி ஒட்டுநர் பதவிக்கு உயர்வு பெற்றவராகவும் கருதப்பட வேண்டுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனின், இந்த விடயங்களை கருத்திற்கொண்டு திரு. மஹ்ருபின் ஓய்வூதியம் மற்றும் அதற்கு ஏற்புடையதாக கிடைக்கவேண்டிய அனைத்து கொடுப்பனவுகளை தயாரித்து தாமதமின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1012/ '10

கௌரவ சாந்த பண்டார,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்சமயம் காணப்படும் ஆயுர்வேத வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) இவற்றில் குருநாகல் மாவட்டத்தில் உள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகள் யாவையென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு மேலதிகமாக உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் நிர்வகிப்படும் அல்லது அவற்றால் நிர்வகிக்கப்படாத கிராமிய மட்டத்திலான ஆயுர்வேத மருத்துவ நிலையங்கள் உள்ளனவென்பதையும்,

(ii) மேற்படி நிலையங்களுக்குத் தேவையான மருந்து வகைகள் போதுமான அளவில் கிடைப்பதில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) போதுமான அளவில் மருந்துவகைகள் கிடைக்காத ஆயுர்வேத மருத்துவ நிலையங்களுக்கு மருந்துகளை பெற்றுக்கொடுப்பதற்கு மத்திய அரசாங்கத்தின் சுதேச மருத்துவ அமைச்சின் ஊடாக வேலைத்திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1017/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டின் நிறைவின் போது இலங்கையில் அறிக்கையிடப்பட்ட குறைந்த எடையுடன் பிறந்த பிள்ளைகளின் சதவீதம் யாதென்பதையும்,

(ii) குறைந்த எடையுடன் பிறக்கும் பிள்ளைகளின் சதவீதத்தைக் குறைப்பதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி நடவடிக்கைகள் போஷாக்கின்மை நிலைமையைக் குறைப்பதற்கு போதுமானதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

0333/10

கௌரவ ரவி கருணநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்பொழுது தொழிற்படும் மாநகரசபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் எண்ணிக்கையையும்,

(ii) மாநகரசபை, நகரசபை, பிரதேச சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்டு அரசாங்கத்தையும், எதிர்த்தரப்பையும் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர் களின் பெயர்கள், பிறந்த திகதி, அரசியல் கட்சி ஆகியவற்றையும்,

(iii) மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை உறுப்பினர்களுக்கு உரித்தான நன்மைகள் என்ன என்பதையும்,

(iv) மேற்படி நிறுவனங்களில் தொழில் புரியும் பணியாளர்களின் மெத்த எண்ணிக்கை என்னவென்பதையும்,

(v) அவர்களின் மாதாந்த சம்பளத்திற்கான மொத்த செலவின எவ்வளவென்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0817/ ’10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் மாத்தறை வலயக் கல்வி காரியாலயத்திற்குரிய திக்வெல்ல கோட்டக்கல்வி அலுவலகத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) இப்பாடசாலைகளில் நூறு மாணவர்களுக்குக் குறைவாக உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iv) நூறு மாணவர்களுக்குக் குறைவாக உள்ள பாடசாலைகளில் மூடுவதற்காக தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்தில் ஆசிரியர் மிகை நிலவுகின்ற பாடசாலைகள் உள்ளனவா என்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iv) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடங்கள் யாவையென்பதையும்,

(v) இவ்வாசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) ஆமெனில், இதற்காக எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்,

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0902/ '10

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(ஆ) (i) ஊவா மூலதன கூட்டுறவுச் சங்கத்துடன் இணைந்த வங்கியில் ஆரம்பிக்கப்படவுள்ள சிறுவார் சேமிப்புக் கணக்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இக்கணக்குகளின் உரிமையாளர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) இவ்வங்கியில் வைப்பிலிடும் நிதியிலிருந்து வங்கி உத்தியோகத்தர்களுக்கும் வேறு நபர்களுக்கும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) அவ்வாறாயின், கடன் வழங்கப்பட்டுள்ளவர்களின் பெயர், முகவரி ஆகியவை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ்வாறு பெறப்பட்ட கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளதென்பதையும்,

(ii) திருப்பிச் செலுத்தத் தவறியவர்கள் தொடர்பாக வங்கியினால் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) இக்கடன்களைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) இவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0980/ '10

கௌரவ எம்.ரீ.ஹஸன் அலி,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கையிலிருந்து சவூதி அரேபியாவுக்கு வீட்டுப் பணிப்பெண்ணாகச் சென்ற செல்வி றிசானா நபீக்குக்கு அந்நாட்டு நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) செல்வி றிசானா நபீக், இலங்கையிலிருந்து, வீட்டுப் பணிப்பெண்ணாக புறப்பட்டுச் சென்ற திகதி, கடவுச்சீட்டு இலக்கம், அதில் குறிப்பிடப்பட்டுள்ள பிறந்த திகதி, மற்றும் அது வழங்கப்பட்ட திகதி என்பன யாவை என்பதையும்,

(ii) அவருடைய இலங்கை கடவுச்சீட்டு விண்ணப்பப் படிவத்தை அத்தாட்சிப் படுத்திய சமாதான நீதவானின் பெயர் மற்றும் விலாசம் என்பற்றையும்,

(iii) செல்வி றிசானாவின் பிறப்புச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள பிறந்த திகதி, பதிவு இலக்கம், மற்றும் திகதி அத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ள ஆளுகைப் பிரதேசம் என்பன யாவை என்பதையும்,

(iv) அவருடைய தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள பிறந்த திகதி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் யாது என்பதையும்,

(v) செல்வி றிசானாவின் வெளிநாடு செல்வதற்கு உதவிய, வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்தின் பெயர் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) அவருக்கு சவூதி அரேபிய நீதிமன்றம் மரண தண்டனை விதித்த திகதி மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பினை அறிவித்த திகதி யாதென்பதை அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1013/ '10

கௌரவ சாந்த பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எமது நாட்டிலுள்ள 15 வயதுக்கு குறைவான சிறுவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி சிறுவர்களில் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) போஷாக்கின்மை காரணமாக 2009 ஆம் ஆண்டில் மேற்படி வயதுப் பிரிவைச் சேர்ந்த சிறுவர்கள் உயிரிழந்திருப்பதாக அறிக்கையிடப் பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், இந்நிலைமையை தடுப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1018/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டின் இறுதியளவில் உயரக் குறைவாதல் அதாவது குள்ளமாதல் எனும் போஷாக்கின்மை நிலைமைக்கு ஆளாகியுள்ள சிறுவர் சதவீதம் யாதென்பதையும்,

(ii) இப்போஷாக்கின்மையைக் குறைப்பதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி நடவடிக்கைகள் குள்ளமாகின்ற போஷாக்கின்மை நிலைமையைக் இல்லாதொழிப்பதற்கு போதுமானதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

0427/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கிரிக்கெட்டிற்கு சர்வதேசக் குழு ஒன்று உண்டா என்பதையும்,

(ii) அவ்வாறாயின் அக்குழுவின் உறுப்பினர்களின் பெயர்களையும்

அவர் அறியத்தருவாரா?

(ஆ) (i) 2010 ஆம் வருடத்திற்காக இலங்கை கிரிக்கட்டுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள கிரிக்கட் வீரர்களின் பெயர்களையும்,

(ii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள வீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிதி பொதியினை தலா அடிப்படையில் வெவ்வேறாகவும்,

(iii) 2005 முதல் 2009 வரையான காலப்பகுதியில் இலங்கை கிரிக்கட்டினால் கொடுப்பனவு செலுத்தப்பட்ட கிரிக்கட் வீரர்களின் பெயர்களையும்,

(iv) அவர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட நிதிப் பொதியினை வெவ்வேறாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0818/ '10

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் மாத்தறை வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் வரும் திக்வெல்ல கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் பொதுக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுத் தேவைகளில் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலை முறைமையினுள் உள்ள,

(i) மின்சார வசதியில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) நூல்நிலையம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) மின்சார வசதியில்லாத ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(v) தளபாடம் தேவையாகவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி குறைபாடுகள் நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்,

(ii) மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1019/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு இறுதியில் இலங்கையில் அறிக்கையிடப்பட்ட குறைந்த நிறை கொண்ட குழந்தைகளின் சதவீதம் எவ்வளவென்பதையும்,

(ii) குறைந்த நிறை கொண்ட குழந்தைகளின் சதவீதத்தை குறைப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(iii) இந்நடவடிக்கைகள் மேற்கூறப்பட்ட போஷாக்கின்மை நிலைமையினை குறைப்பதற்கு போதுமானதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— (420 ஆம் அத்தியாயமான) பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவின் கீழ், நிதி, திட்டமில் அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2011, பெப்புருவரி மாதம் 25 ஆம் திகதிய 1694/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.05.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— (420 ஆம் அத்தியாயமான) பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவின் கீழ், நிதி, திட்டமில் அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2011, பெப்புருவரி மாதம் 25 ஆம் திகதிய 1694/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.05.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— (420 ஆம் அத்தியாயமான) பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவின் கீழ், நிதி, திட்டமில் அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2011, பெப்புருவரி மாதம் 25 ஆம் திகதிய 1694/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.05.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2009 ஆம் ஆண்டின் 13 இலக்க நிதி (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமில் அமைச்சரினால் துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 17 ஆம் திகதிய 1689/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.05.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டத்தின் 5 ஆம் 9 ஆம் மற்றும் 17 ஆம் பிரிவுகளுடன், சேர்த்து வாசிக்கப்படும் 204 ஆம் பிரிவின் கீழ், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2011 சனவரி மாதம் 05 ஆம் திகதிய 1687/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.05.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

ஒலகங்கல மஹா சுதர்ஷன பரோபகாரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்
# (2011, மே 25, புதன்கிழமை)

0205/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பசறை பிரதேச செயலாளர் பிரிவில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய ஆரம்பத்தில் ஆணைக்குழு கொண்டிருந்த மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை விற்கப்பட்டுள்ள காணிகளினளவு எவ்வளவென்பதையும்,

(iii) அதில் 5 ஏக்கருக்குக் கூடுதலான விற்பனைகளில் காணியின் பெயர், காணியின் அளவு, விற்கப்பட்ட திகதி, கொள்வனவாளர், விற்கப்பட்ட தொகை யாதென்பதையும்

இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், வழங்கப்பட்ட காணியின் பெயர், குத்தகைக் கொள்வனவாளர், வழங்கப்பட்ட திகதி, பெற்றுக்கொண்ட குத்தகைப் பணம், குத்தகை முடிவுத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட பிரிவில் எஞ்சியுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவை கிராம அலுவலர் பிரிவினடிப்படையில் எவ்வளவு ஏக்கர்களென்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0206/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) லுனுகல பிரதேச செயலாளர் பிரிவில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய ஆரம்பத்தில் ஆணைக்குழு கொண்டிருந்த மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை விற்கப்பட்டுள்ள காணிகளினளவு எவ்வளவென்பதையும்,

(iii) அதில் 5 ஏக்கருக்குக் கூடுதலான விற்பனைகளில் காணியின் பெயர், காணியின் அளவு, விற்கப்பட்ட திகதி, கொள்வனவாளர், விற்கப்பட்ட தொகை யாதென்பதையும்

இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், வழங்கப்பட்ட காணியின் பெயர், குத்தகைக் கொள்வனவாளர், வழங்கப்பட்ட திகதி, பெற்றுக்கொண்ட குத்தகைப் பணம், குத்தகை முடிவுத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட பிரிவில் எஞ்சியுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவை கிராம அலுவலர் பிரிவினடிப்படையில் எவ்வளவு ஏக்கர்களென்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0207/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹாலிஎல பிரதேச செயலாளர் பிரிவில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய ஆரம்பத்தில் ஆணைக்குழு கொண்டிருந்த மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை விற்கப்பட்டுள்ள காணிகளினளவு எவ்வளவென்பதையும்,

(iii) அதில் 5 ஏக்கருக்குக் கூடுதலான விற்பனைகளில் காணியின் பெயர், காணியின் அளவு, விற்கப்பட்ட திகதி, கொள்வனவாளர், விற்கப்பட்ட தொகை யாதென்பதையும்

இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், வழங்கப்பட்ட காணியின் பெயர், குத்தகைக் கொள்வனவாளர், வழங்கப்பட்ட திகதி, பெற்றுக்கொண்ட குத்தகைப் பணம், குத்தகை முடிவுத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட பிரிவில் எஞ்சியுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவை கிராம அலுவலர் பிரிவினடிப்படையில் எவ்வளவு ஏக்கர்களென்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0208/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய ஆரம்பத்தில் ஆணைக்குழு கொண்டிருந்த மொத்த காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை விற்கப்பட்டுள்ள காணிகளினளவு எவ்வளவென்பதையும்,

(iii) அதில் 5 ஏக்கருக்குக் கூடுதலான விற்பனைகளில் காணியின் பெயர், காணியின் அளவு, விற்கப்பட்ட திகதி, கொள்வனவாளர், விற்கப்பட்ட தொகை யாதென்பதையும்

இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், வழங்கப்பட்ட காணியின் பெயர், குத்தகைக் கொள்வனவாளர், வழங்கப்பட்ட திகதி, பெற்றுக்கொண்ட குத்தகைப் பணம், குத்தகை முடிவுத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட பிரிவில் எஞ்சியுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவை கிராம அலுவலர் பிரிவினடிப்படையில் எவ்வளவு ஏக்கர்களென்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0209/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹப்புத்தளை பிரதேச செயலாளர் பிரிவில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய ஆரம்பத்தில் ஆணைக்குழு கொண்டிருந்த மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை விற்கப்பட்டுள்ள காணிகளினளவு எவ்வளவென்பதையும்,

(iii) அதில் 5 ஏக்கருக்குக் கூடுதலான விற்பனைகளில் காணியின் பெயர், காணியின் அளவு, விற்கப்பட்ட திகதி, கொள்வனவாளர், விற்கப்பட்ட தொகை யாதென்பதையும்

இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், வழங்கப்பட்ட காணியின் பெயர், குத்தகைக் கொள்வனவாளர், வழங்கப்பட்ட திகதி, பெற்றுக்கொண்ட குத்தகைப் பணம், குத்தகை முடிவுத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட பிரிவில் எஞ்சியுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவை கிராம அலுவலர் பிரிவின் அடிப்படையில் எவ்வளவு ஏக்கர்கள் என்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0210/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹல்தும்முல்ல பிரதேச செயலாளர் பிரிவில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய ஆரம்பத்தில் ஆணைக்குழு கொண்டிருந்த மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை விற்கப்பட்டுள்ள காணிகளினளவு எவ்வளவென்பதையும்,

(iii) அதில் 5 ஏக்கருக்குக் கூடுதலான விற்பனைகளில் காணியின் பெயர், காணியின் அளவு, விற்கப்பட்ட திகதி, கொள்வனவாளர், விற்கப்பட்ட தொகை யாதென்பதையும்

இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், வழங்கப்பட்ட காணியின் பெயர், குத்தகைக் கொள்வன வாளர், வழங்கப்பட்ட திகதி, பெற்றுக்கொண்ட குத்தகைப் பணம், குத்தகை முடிவுத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட பிரிவில் எஞ்சியுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவை கிராம அலுவலர் பிரிவினடிப்படையில் எவ்வளவு ஏக்கர்களென்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2011, மே 26, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0430/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரினைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) அரசாங்கத்திற்குச் சொந்தமான கூட்டுத்தாபனங்கள், சபைகள் போன்ற சகல நிறுவனங்களின் பெயர்களையும், அவை ஒவ்வொன்றிலும் இற்றைவரை முதலீடு செய்யப்பட்டுள்ள மூலதனத்துடன் வெவ்வேறாகவும்,

(ii) கடந்த மூன்று வருடங்களாக அத்தகைய நிறுவனங்களில் பணியாற்றிவரும் ஆட்களின் எண்ணிக்கையினையும்,

(iii) அரசாங்கம் அந்நிறுவனங்களில் கொண்டுள்ள பங்குகளின் அளவினையும்,

(iv) மேலே (அ) (i) இலுள்ளவாறான நிறுவனங்களின் கடந்த வருடத்திற்கான இலாப, நட்டங்களை நிறுவன ரீதியில் வெவ்வேறாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) (அ) (i) இலுள்ள நிறுவனங்களில், அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிற்கோ அல்லது அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கோ அறிக்கையிடாத நிறுவனங்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அறிக்கையிடாமைக்கான காரணத்தையும்,

(iii) இது அரசியலமைப்பின் பிரிவு 148 ஐ மீறுகின்ற ஒரு செயலா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0624/ '10

கௌரவ ஆர். யோகராஜன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) கொழும்பு 12, ஹுசைனியா வீதி, இலக்கம் 45 இல் அமைந்துள்ள ஹமீட் அல் ஹுசைனியா கல்லூரியில் கடும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையில் அங்கீகரிக்கப்பட்ட சிங்கள, தமிழ் மொழி மூல ஆசிரிய ஆளணியை பாடவாரியாகவும்,

(ii) ஒவ்வொரு மொழி மூலத்திலும் பாடரீதியாக தற்போதுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையையும்,

(iii) ஒவ்வொரு மொழி மூலத்திலும் பாடரீதியாக தற்போது காணப்படுகின்ற ஆசிரியர் பற்றாக்குறை எவ்வளவு என்பதையும்,

(iv) மேற்படி ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கையையும்,

(v) அந்நடவடிக்கைகள் எப்போது மேற்கொள்ளப்படுமென்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) ரோயல், ஆனந்த மற்றும் நாளந்த ஆகிய கல்லூரிகளில் மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) மேற்படி (இ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளில் மேலதிகமாக காணப்படுகின்ற ஆசிரியர்களது எண்ணிக்கையை போதனா மொழி ரீதியாகவும் பாடவாரியாகவும் யாதென்பதையும்,

(ii) ஹமீட் அல் ஹுசைனியா கல்லூரியில் தற்போது நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக மேலதிக ஆசிரியர்களை இப்பாடசாலைக்கு இடமாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0819/ '10

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் மாத்தறை வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் வரும் தெவிநுவர கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் பொதுக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுத் தேவைகளில் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலை முறைமையினுள் உள்ள,

(i) மின்சார வசதியில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) நூல்நிலையம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) மின்சார வசதியில்லாத ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(v) தளபாடம் தேவையாகவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி குறைபாடுகள் நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்,

(ii) மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0906/ '10

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) புத்தளம் மாவட்டத்தின் கல்பிட்டி கல்வி வலயத்தில் அமைந்துள்ள சுமார் இரண்டாயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்கின்ற அல்-அக்ஸா தேசிய பாடசாலையில் தற்போது பல்வேறு பாடங்களுக்கு சுமார் இருபது ஆசிரியர்களுக்கும் அதிகமான பற்றாக்குறையும் பௌதிக வளங்கள் இல்லாத நிலைமையும் உள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலையில் நிலவுகின்ற பெரும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும் கேட்போர்கூட வசதி உட்பட தேவையான பௌதிக வளங்களை பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கையெடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0926/ '10

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு துறைமுகத்தின் புதிய கொள்கலன் இறங்குதுறையை நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவினம் யாதென்பதையும்,

(ii) அந்த மொத்தச் செலவினத்தில் உள்நாட்டிலிருந்து பெறப்படும் தொகை யாதென்பதையும்,

(iii) வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் தொகை எவ்வளவு யாதென்பதையும்,

(iv) அந்தக் கருத்திட்டத்திற்கு நிதி கிடைக்கும் வழிகள் யாவையென்பதையும்,

(v) மொத்தச் செலவினத்தில் கடனாகக் கிடைக்கும் தொகை யாதென்பதையும்,

(vi) கடன் தொகைகளை வழங்கும் நாடுகள், குறிப்பிட்ட வட்டி வீதங்கள் மற்றும் கடனை அடைக்கும் கால எல்லைகள் யாவையென்பதையும்,

(vii) முழுமையான கருத்திட்டத்தையும் பூர்த்தி செய்ய எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இந்தக் கருத்திட்டத்தின் பணிகளுக்காக ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் விதி முறை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0981/ '10

கௌரவ எம்.ரீ.ஹஸன் அலி,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சவூதி அரேபியாவில் நடைமுறையில் உள்ள சட்டம், இஸ்லாமிய ஷரீஆ சட்டம் என்பதையும்,

(ii) இஸ்லாமிய ஷரீஆ சட்டத்துக்கு அமைய, நீதிமன்றம் எவரேனும் ஒரு நபருக்கு மரண தண்டனை விதிக்கையில், குறிப்பிட்ட குற்றவாளி சட்ட விரோதச் செயலை அல்லது குற்றத்தை புரியும் திகதியன்று 18 வயதைப் பூர்த்தி செய்திருத்தல் கவனித்தல் கொள்ளப்படுகின்றது என்பதையும்,

(iii) தற்போது சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள செல்வி றிசானா நபீக், இக்குற்றச்சாட்டுக்கு உள்ளாகின்ற போது அவர் உண்மையிலேயே 17 வயதுடையவராக இருந்தார் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில், செல்வி றிசானாவுக்கு போலி பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை மற்றும் இலங்கை கடவுச் சீட்டு விண்ணப்பப் படிவத்தை அத்தாட்சிப்படுத்திய சமாதான நீதவானுக்கும் வெளிநாடு செல்வதற்கு உதவிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவன உரிமையாளருக்கும் எதிராக இற்றைவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்,

(ii) றிசானாவுக்கு எதிராக அந்நாட்டு நீதிமன்றத்தில் நடத்தப்பட்ட விசாரணையின்போது உரிய விதத்தில் விடயங்களை முன்வைக்கத் தவறிய இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அவருக்கு அத்தண்டனை விதித்தமைக்கான முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1021/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு இறுதியில் இலங்கையில் குருதிச் சோகையினால் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிக்கையிடப்பட்டுள்ள கர்ப்பிணித் தாய்மார்களின் சதவீதம் எவ்வளவென்பதையும்,

(ii) கர்ப்பிணித் தாய்மார்கள் மத்தியில் நிலவுகின்ற குருதிச் சோகையை ஒழிப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளையும்,

(iii) அரசாங்கத்தின் மேற்படி நடவடிக்கைகள் கர்ப்பிணித் தாய்மார்களின் குருதிச்சோகையைக் குறைப்பதற்குப் போதுமானதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1090/ '11

கௌரவ (அல் ஹாஜ்) எ.எச்.எம். அஸ்வர்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'ஹெலதுறு வியன' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இதுவரை யூகலிப்டஸ் மற்றும் பைனஸ் செய்கையை நீக்கிவிட்டு உள்நாட்டுத் தாவரங்கள் நடப்பட்டுள்ள நிலப்பரப்பு எத்தனை ஏக்கர் என்பதையும்,

(ii) அந்தப் பிரதேசங்களில் செய்கைக்காக தெரிவு செய்யப்பட்ட உள்நாட்டுத் தாவர இனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இந்த உள்நாட்டுத் தாவரங்களைத் தெரிவு செய்யும் போது, யூகலிப்டஸ் மற்றும் பைனஸ் செய்கை மூலம் தேசிய மரத்தேவையைப் பூர்த்தி செய்ய வழங்கும் பங்களிப்புக்கு சமனான வகையில் பூர்த்திசெய்யக் கூடிய விதத்தில் உள்நாட்டுத் தாவரங்களைத் தெரிவு செய்வதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன்?

1060/ '11

கௌரவ வசந்த அலுவிஹாரே,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தளை – ரத்தோட்டை வீதியை அபிவிருத்தி செய்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்கான நிலஅளவைப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு வீதி வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை யாதென்பதையும்,

(iii) அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இவ்வீதியை விஸ்தரிக்கின்ற பணியின்போது,

(i) சுவீகரிக்கப்படும் காணிகளின் பரப்பளவு மற்றும் உடைத்தகற்றப்படும் வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி காணிகள் மற்றும் வீடுகளை இழப்போரின் பெயர்களையும்,

(iii) மேற்படி ஆதனங்கள் சுவீகரிக்கப்படுகின்றமை தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) வர்த்மானி அறிவித்தலொன்று வெளியிடப்படாவிடின் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி வீதியை விஸ்தரிக்கின்றபோது சுவீகரிக்கப்படும் ஆதனங்களுக்கு இழப்பீடு வழங்கப்படுமா என்பதையும்,

(ii) அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்,

(iii) குறித்த இழப்பீட்டுத்தொகை செலுத்தி முடிக்கப்படும் திகதி யாதென்பதையும்,

(iv) சுவீகரிக்கப்படும் காணிகளுக்காக மாற்றுக்காணிகள் வழங்கப்படுமா என்பதையும்,

(v) அவ்வாறாயின், குறித்த காணிகள் வழங்கப்படும் இடம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0450/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய லொத்தர் சபையின் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான இலாப, நட்டத்தையும்,

(ii) ஒவ்வொரு ஆண்டினதும் டிசெம்பர் 31ஆம் திகதியன்றுள்ளவாறு மேற்படி நிறுவனத்தின் ஐந்தொகை நிலையையும்

அவர் வெவ்வேறாக குறிப்பிடுவாரா?

(ஆ) கடந்த ஐந்து வருடங்களாக ஒவ்வொரு ஆண்டு நிதி அறிக்கையிலும் வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை குறித்து அவர் தனித்தனியாக தெரிவிப்பாரா?

(இ) (I) தேசிய லொத்தர் சபையில் பணியாற்றும் ஆட்களின் எண்ணிக்கையையும்,

(II) கடந்த ஐந்து வருடங்களாக, தேசிய லொத்தர் சபையால் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்ட பணத்தொகையை வருடாந்த அடிப்படையிலும் அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0820/ '10

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் மாத்தறை வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் வரும் வெலிகம கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் பொதுக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுத் தேவைகளில் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலை முறைமையினுள் உள்ள,

(i) மின்சார வசதியில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) நூல்நிலையம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) மின்சார வசதியில்லாத ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(v) தளபாடம் தேவையாகவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி குறைபாடுகள் நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்,

(ii) மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1024/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது எமது நாட்டில் வன சீவராசிகளைப் பாதுகாப்பதற்கான தேசிய திட்டம் ஒன்று உள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அதனை காலவரையறைகள் மற்றும் இலக்குகள் சகிதம் அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்,

(iii) மேற்படி திட்டத்தை அமுல்படுத்தவதற்கு போதிய வழங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சிடம் உள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1046/ '10

கௌரவ மொஹமட் அஸ்லம்,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 (2008)ஆம் ஆண்டு இலங்கை பொது நிர்வாக சேவையில், தரம் மூன்று பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக, திறந்த போட்டிப் பரீட்சையொன்று நடத்தப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தி தகைமை அடைந்தவர்களுக்கு, நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்ட திகதிகள் யாவை என்பதையும்,

(iii) நேர்முகப்பரீட்சையின் பின்னர் குறித்த பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்ட எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) ஆட்சேர்க்கப்பட்டவர்களின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைபெற்றது மாவட்ட மட்டத்திலா அல்லது தேசிய மட்டத்திலா என்பதையும்,

(ii) நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட குறைந்தபட்ச புள்ளி மட்டம் யாதென்பதையும்,

(iii) மேற்படி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட இன விகிதாசாரம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0451/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) கடந்த ஐந்து வருடங்களுக்கான,

(i) அபிவிருத்தி லொத்தர் சபையின் இலாப, நட்டத்தையும்,

(ii) மேற்படி நிறுவனத்தின் ஒவ்வொரு வருடத்தினதும் திசெம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறான ஐந்தொகை நிலைமையையும்,

அவர் தனித்தனியாக தெரிவிப்பாரா?

(ஆ) ஒவ்வொரு வருடத்தின் நிதி அறிக்கையிலும் தரப்பட்ட கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கை பற்றி வெவ்வேறாக அறிவிப்பாரா?

(இ) (i) அபிவிருத்தி லொத்தர் சபையில் வேலை செய்கின்றவர்களின் எண்ணிக்கையையும்,

(ii) கடந்த ஐந்து வருடங்களாக ஒவ்வொரு வருடமும் லொத்தர் சபையிடமிருந்து அரசாங்கத்திற்கு எவ்வளவு பணம் செலுத்தப்படாத என்பதை வருடாந்த அடிப்படையிலும்

அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0821/ '10

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் மாத்தறை வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் வரும் மாத்தறை கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் பொதுக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுத் தேவைகளில் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலை முறைமையினுள் உள்ள,

(i) மின்சார வசதியில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) நூல்நிலையம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) மின்சார வசதியில்லாத ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(v) தளபாடம் தேவையாகவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி குறைபாடுகள் நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்,

(ii) மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்
## (2011, மே 26, வியாழக்கிழமை)

0211/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வெலிமட பிரதேச செயலாளர் பிரிவில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய ஆரம்பத்தில் ஆணைக்குழு கொண்டிருந்த மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை விற்கப்பட்டுள்ள காணிகளினளவு எவ்வளவென்பதையும்,

(iii) அதில் 5 ஏக்கருக்குக் கூடுதலான விற்பனைகளில் காணியின் பெயர், காணியின் அளவு, விற்கப்பட்ட திகதி, கொள்வனவாளர், விற்கப்பட்ட தொகை யாதென்பதையும்

இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், வழங்கப்பட்ட காணியின் பெயர், குத்தகைக் கொள்வனவாளர், வழங்கப்பட்ட திகதி, பெற்றுக்கொண்ட குத்தகைப் பணம், குத்தகை முடிவுத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட பிரிவில் எஞ்சியுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவை கிராம அலுவலர் பிரிவினடிப்படையில் எவ்வளவு ஏக்கர்களென்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0212/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எல்ல பிரதேச செயலாளர் பிரிவில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய ஆரம்பத்தில் ஆணைக்குழு கொண்டிருந்த மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை விற்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வள வென்பதையும்,

(iii) அதில் 5 ஏக்கருக்குக் கூடுதலான விற்பனைகளில் காணியின் பெயர், காணியின் அளவு, விற்கப்பட்ட திகதி, கொள்வனவாளர், விற்கப்பட்ட தொகை யாதென்பதையும்

இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், வழங்கப்பட்ட காணியின் பெயர், குத்தகைக் கொள்வனவாளர், வழங்கப்பட்ட திகதி, பெற்றுக்கொண்ட குத்தகைப் பணம், குத்தகை முடிவுத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட பிரிவில் எஞ்சியுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவை கிராம அலுவலர் பிரிவினடிப்படையில் எவ்வளவு ஏக்கர்களென்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0213/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஊவா பரணகம பிரதேச செயலாளர் பிரிவில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய ஆரம்பத்தில் ஆணைக்குழு கொண்டிருந்த மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை விற்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வள வென்பதையும்,

(iii) அதில் 5 ஏக்கருக்குக் கூடுதலான விற்பனைகளில் காணியின் பெயர், காணியின் அளவு, விற்கப்பட்ட திகதி, கொள்வனவாளர், விற்கப்பட்ட தொகை யாதென்பதையும்

இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், வழங்கப்பட்ட காணியின் பெயர், குத்தகைக் கொள்வனவாளர், வழங்கப்பட்ட திகதி, பெற்றுக்கொண்ட குத்தகைப் பணம், குத்தகை முடிவுத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட பிரிவில் எஞ்சியுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவை கிராம அலுவலர் பிரிவின் அடிப்படையில் எவ்வளவு ஏக்கர்கள் என்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2011, யூன் 07, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0376/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) பால்மா, எரிவாயு, சீனி, பருப்பு, வெங்காயம், உருளைக்கிழங்கு, அரிசி, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், பெற்றோலியம் ஆகிய இறக்குமதிப் பொருட்கள் மீது விதிக்கப்படும் சுங்கவரி மற்றும் ஏனைய சகல விதமான வரிகளையும்,

(ii) கடந்த 10 வருடங்களாக இறக்குமதி செய்யப்பட்ட மேற்படி பொருட்களின் அளவையும்,

(iii) கடந்த 5 வருடங்களாக வரி விதிப்பின் மூலம் ஈட்டப்பட்ட வருமானத்தையும்,

(iv) மேற்படி பொருட்களில் ஏதாவது கடந்த 5 வருடங்களில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டிருப்பின் அவற்றின் அளவை வருடாந்த அடிப்படையிலும்,

(v) கடந்த 5 வருடங்களுக்கான மேற்படி பொருட்களின் வருடாந்த நுகர்வையும்

தனித்தனியாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0802/ '10

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மாத்தறை மாவட்டத்தின் அகுரெஸ்ஸ வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் வரும் அகுரெஸ்ஸ கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் பொதுக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுத் தேவைகளில் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலை முறைமையினுள் உள்ள,

(i) மின்சார வசதியில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) நூல்நிலையம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) மின்சார வசதியில்லாத ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(v) தளபாடம் தேவையாகவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(vi) மேற்படி குறைபாடுகள் நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0880/ '10

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை சட்டக் கல்லூரியின் மொத்த வருமானம் தனித்தனியே எவ்வளவென்பதை அவர் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும்,

(i) விரிவுரைக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சைக்கான விண்ணப்பக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி பரீட்சையின் பரீட்சைக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்,

(iv) வேறு வழிகளில் இலங்கை சட்டக் கல்லூரிக்கு கிடைத்த வருமானம் எவ்வளவென்பதையும்,

(v) இலங்கை சட்டக் கல்லூரியின் செலவினம் எவ்வளவென்பதையும்

தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கை சட்டக் கல்லூரியின் நிதி முகாமைத்துவத்தை ஒழுங்கு முறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை என்பதையும்,

(ii) 2009 ஆம் ஆண்டுக்கான நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விரிவுரைக்கட்டணங்களை அதிகரிக்காது இலங்கை சட்டக்கல்லூரியின் நடவடிக்கைகளைப் பேணிவர முடியாதாவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1030/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு இறுதியளவில் இலங்கையில் பெருந்தோட்டத்துறையில் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருந்த கர்ப்பிணித் தாய்மார்களின் சதவீதம் எவ்வளவென்பதையும்,

(ii) இப்போஷாக்கின்மை நிலைமைகளைப் போக்குவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்,

(iii) மேற்படி நடவடிக்கைகள் பெருந்தோட்டத்துறையில் கர்ப்பிணித் தாய்மார்களின் போஷாக்கின்மையைப் போக்குவதற்கு போதுமானவையா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1045/ '10

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்சிஷினீ பெர்னாந்துபுள்ளே,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம் எனப்படும் சதொச தனியார் மயமாக்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(ii) அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் யாதென்பதையும்,

(iii) மேற்படி அரசாங்கத்தில் சதொச விடயத்திற்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் யாரென்பதையும்,

(iv) சதொசவை தனியார் மயமாக்கியதால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தனியார் மயமாக்கப்பட்டிருந்த சதொச மீண்டும் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(ii) அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் யாதென்பதையும்,

(iii) சதொச மீண்டும் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட காலப்பகுதியில் விடயத்திற்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் யாரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1164/ '11

கௌரவ அனுர திஸாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வகுப்புத் தடைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) அந்த மாணவர்களின்/மாணவிகளின் பெயர்கள் மற்றும் வகுப்புத் தடை செய்யப்பட்டமைக்கான குற்றச்சாட்டுக்கள் தனித்தனியாக யாதென்பதையும்,

(iii) இவர்களில் முறையான விசாரணை நடத்தப்பட்டு இறுதி முடிவு வழங்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iv) வகுப்புத் தடைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள ஏனைய மாணவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0449/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வர்த்தக வங்கிகள் பற்றிய அரசாங்கத்தின் கொள்கை பற்றியும்,

(ii) தனியார் வங்கிகளில் அரசாங்கம் பங்குகளைக் கொள்வனவு செய்கின்றதா என்பது பற்றியும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இன்றுள்ளவாறாக, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (ஊ.ந.பொ.நி) அல்லது வேறு ஏதேனும் அரச நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட தனியார் வங்கிகளின் பங்குக் கொள்வனவின் மொத்த அளவையும்,

(ii) ஒவ்வொரு வங்கியிலிருந்தும் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகளின் சதவீதத்தையும், செலுத்தப்பட்ட மொத்த கிரயத்தை, அத்தகைய கொள்வனவு மேற்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து வெவ்வேறாக ஆண்டுவாரியாகவும்,

(iii) பங்கு விலைகள் வீழ்ச்சியடைந்தால், பங்குக் கொள்வனவில் ஏற்படும் இடர்களை ஏற்பது யார் என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0822/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் முலட்டியன வலயக்கல்வி காரியாலயத்திற்குட்ட ஹக்மண கோட்டக் கல்வி காரியாலயத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் அரச பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள், விலாசங்கள், மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) இவற்றில் தற்போது மூடப்பட்டுள்ள அல்லது மூடிவிடுவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iv) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்தில் ஆசிரியர் மிகையை கொண்டுள்ள பாடசாலைகளினதும் ஆசிரியர் பற்றாக்குறையைக் கொண்டுள்ள பாடசாலைகளினதும் பெயர்கள் யாவையென்பதையும்,

(ii) ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடங்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் பெற்றுக்கொடுக்கப்படுவார்களா என்பதையும்,

(iv) அதற்கு எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி அ(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளில்,

(i) மின்சார வசதி இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கையையும்,

(ii) தளபாடத் தேவைகளைக் கொண்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அத்தேவைகளின் தன்மையையும்,

(iii) விஞ்ஞான ஆய்வு கூட மற்றும் நூலக வசதிகளற்ற பாடசாலைகளின் எண்ணிக்கையையும் அவற்றின் பெயர்களையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ள வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான நிதியை அப்பாடசாலைகளுக்கு ஒதுக்கித்தர நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனில், அதற்காக எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0904/ '10

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படைகளுக்கான ஆயுதங்களையும் ஏனைய உபகரணங்களையும் கொள்வனவு செய்கின்ற போது நடைபெற்றுள்ளதாகக் கூறப்படுகின்ற மோசடிகள் சம்பந்தமாக விசாரணைகளை நடத்துவதற்காக உயர் நீதிமன்ற நீதிபதி கௌரவ திருமதி சிரானி திலகவர்தனவின் தலைமையிலான ஆணைக்குழுவொன்று அதிமேதகு சனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளதா என்பதையும் ,

(ii) ஆமெனில், மேற்படி ஆணைக்குழு நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(iii) மேற்படி ஆணைக்குழுவில் அங்கத்துவம் வகித்தவர்கள் யாரென்பதையும் ,

(iv) மேற்படி ஆணைக்குழுவின் அறிக்கை அதிமேதகு சனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஆணைக்குழுவின் விடயப் பரப்பு யாதென்பதையும்,

(ii) அதில் உள்ளடக்கப்பட்ட கால எல்லை யாதென்பதையும்,

(iii) மேற்படி ஆணைக்குழுவின் அறிக்கையின்படி மோசடிகள் இனங்காணப் பட்டிருப்பின் அவை யாவையென்பதையும்,

(iv) மேற்படி அறிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) (i) மேற்படி அறிக்கையின் பிரகாரம் மோசடிகள் சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டியவர்கள் இனங்காணப்பட்டுள்ளனரா என்பதையும்,

(ii) ஆமெனில் அவர்கள் யாரென்பதையும்,

(iii) மேற்படி நபர்களுக்கு எதிராக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட ரீதியிலான அல்லது ஒழுக்காற்று ரீதியிலான நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(iv) அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனில் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன்?

1032/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு இறுதியளவில் இலங்கையின் வட மாகாணத்தில் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருந்த கர்ப்பிணித் தாய்மார்களின் சதவீதம் எவ்வளவென்பதையும்,

(ii) இப்போஷாக்கின்மை நிலைமைகளைப் போக்குவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்,

(iii) மேற்படி நடவடிக்கைகள் வட மாகாணத்தில் கர்ப்பிணித் தாய்மார்களின் போஷாக்கின்மையைப் போக்குவதற்கு போதுமானவையா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1165/ '11

கௌரவ அனுர திஸாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1980 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் வரை அரச ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள விதம் வருடாந்த ரீதியில் தனித்தனியாக யாதென்பதையும்,

(ii) இக்காலப்பகுதியில் வாழ்க்கைச் செலவு சுட்டெண் அதிகரித்துள்ள விதம் வருடாந்த ரீதியில் தனித்தனியாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) அதிகரிக்கின்ற வாழ்க்கைச் செலவுக்கு ஒப்பீட்டளவில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கவில்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

0454/ ‘10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிர்மாணம், பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை சனாதிபதி 2010, ஜூன் 8 முதல் 10 வரையான காலப்பகுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த போது, தமிழ் மக்களுக்காக 50,000 வீடுகளைக் கட்டுவதற்கு 24 பில்லியன் ரூபாவினை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் இணங்கியதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி இற்றைவரையில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையினையும்,

(ii) அவை கட்டப்பட்டுள்ள இடங்களையும் அவற்றைப் பெற்றுக்கொண்டவர் களின் பெயர்களையும்,

(iii) வீடுகளின் நிர்மாணத்திற்கு முன்னதாக வழங்கப்பட்ட இந்தியாவினால் வழங்கப்பட்ட பணத்தொகையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) புதிய வீடுகளை வழங்குவதற்காக உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரைத் தெரிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் அடிப்படையையும்,

(ii) அவர்கள் தமிழர்களா, முஸ்லிம்களா அல்லது சிங்களவர்களா என்பதையும்,

(iii) உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் குடியமர்த்துவதற்கு இன்னும் தேவைப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கையையும்

அவர் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0823/ ’10

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் முலடியன வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் வரும் கம்புறுப்பிட்டிய கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் பொதுக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுத் தேவைகளில் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலை முறைமையினுள் உள்ள,

(i) மின்சார வசதியில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) நூல்நிலையம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) மின்சார வசதியில்லாத ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(v) தளபாடம் தேவையாகவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(vi) மேற்படி குறைபாடுகள் நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1033/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு இறுதியளவில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருந்த கர்ப்பிணித் தாய்மார்களின் சதவீதம் எவ்வளவென்பதையும்,

(ii) இப்போஷாக்கின்மை நிலைமைகளைப் போக்குவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்,

(iii) மேற்படி நடவடிக்கைகள் கிழக்கு மாகாணத்தில் கர்ப்பிணித் தாய்மார்களின் போஷாக்கின்மையைப் போக்குவதற்கு போதுமானவையா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1166/ '11

கௌரவ அநுர திசாநாயக்க,— கமத்தொழில் சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசின் உர மானிய வேலைத்திட்டத்தின் கீழ் அனுராதபுரம் மாவட்டத்தின் மொத்த உர விநியோகஸ்தராக கமத்தொழில், கமநலப் பயிர்ச் செய்கையாளர்களின் அமைப்பு செயற்படுகின்றதா என்பதையும்,

(ii) அந்த அமைப்பு உர விநியோகத்தை ஆரம்பித்த வருடம் எது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 வரை மேற்கூறிய மொத்த விநியோகஸ்தருக்கு வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்சல் உரக் கம்பனியினால் விநியோகிக்கப்பட்ட ஒவ்வொரு உர வகைகளின் அளவு வருடாந்தம் எவ்வளவு,

(ii) 2009 ஆம் ஆண்டளவில் மேற்படி மொத்த விநியோக்ஸ்தரினால் கமநலச் சேவைகள் நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்ட ஒவ்வொரு உர வகைகளினதும் அளவு எவ்வளவு

என்பதை அவர் வெவ்வேறாக சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி விநியோகஸ்தருக்கு கிடைத்த உரத்தின் அளவுக்கும் விநியோகிக்கப்பட்ட அளவுக்கும் இடையில் ஒப்பீட்டளவில் கையிருப்புத் தொகையில் பற்றாக்குறை காணப்படின் அது எவ்வளவு,

(ii) ஒரு மெற்றிக் தொன் உரத்தின் சந்தைப் பெறுமதிக்கமைய பற்றாக்குறையாக உள்ள அந்த கையிருப்புத் தொகையின் பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்கூறிய நிலமைகளினால் அரசுக்கும் விவசாயிகளுக்கும் நட்டம் ஏற்பட்டுள்ளதென்பதையும்,

(ii) மேற்கூறிய விநியோக்ஸ்த்தர் மோசடி செய்துள்ளாரென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

# 2011, யூன் 08, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0444/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) கடந்த ஐந்து வருடங்களிலே தோற்றுப்போன நிதிக் கம்பனிகளாக அறிவிக்கப்பட்ட நிதிக்கம்பனிகளின் மொத்த எண்ணிக்கையை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) வைப்பாளர்களைப் பாதுகாப்பது இலங்கை மத்திய வங்கியின் பொறுப்பு என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) வைப்பாளரின் பணத்தைப் பெற்றுக்கொண்ட கம்பனிகளால் அப்பணம் திருப்பிச் செலுத்தப்படாத வைப்பாளர்களின் மொத்த எண்ணிக்கையையும்,

(ii) பணம் திருப்பச் செலுத்தத் தவறிய அல்லது கடமை தவறிய கம்பனிகளையும்,

(iii) மத்திய வங்கி தலையிட்டு, எந்தக் கம்பனியும் வங்குரோத்து அடையாது என உறுதியளித்த பின்னரும் 2010.06.01 இல் எவ்வாறு IFC மற்றும் CIFC வைப்பாளர்கள் தம் சேமிப்புக்களை இழந்தார்கள் என்பதையும்

அவர் இச்சபைக்குத் தனித்தனியாகத் தெரிவிப்பாரா?

(ஈ) (i) கம்பனி பணியாளர்களுக்கு என்ன நடந்தது என்பதையும்,

(ii) இந்நிதிக் கம்பனிகளின் வங்கி அறிக்கையிடல் என்று வரும் பொழுது, வேறுபட்ட பணிப்பாளர்களுக்கு வேறுபட்ட நியமங்கள் பிரயோகிக்கப்படுவது ஏன் என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0559/ '10

கௌரவ அஜித் குமார,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) கடந்த சனாதிபதித் தேர்தலின்போது முன்வைக்கப்பட்ட மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கின் கீழ் "ஓய்வுகால வாழ்க்கைக்கான உறுதுணை" திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றவர்களுக்கு நிவாரணமாக 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு 2006 ஆம் ஆண்டு சம்பள முறைக்கு இசைவுறும் விதத்தில் ஓய்வூதியத்தைத் தயாரித்து அடுத்த வரவு செலவுத் திட்டத்திலிருந்து (2010) நடைமுறைப்படுத்துவதாக வாக்குறுதியளிக்கப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2010 வரவு செலவு திட்டத்தில் 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு 2006 ஆம் ஆண்டு சம்பள முறைக்கு இசைவுறும் விதத்தில் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி நிவாரணம் 2010, வரவு செலவு திட்டத்தின் மூலம் வழங்கப்படாதிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்,

(iv) குறித்த ஓய்வூதிய அதிகரிப்பை பெற்றுக்கொடுக்கும் திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0803/ '10

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மாத்தறை மாவட்டத்தின் அகுரெஸ்ஸ வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் வரும் மாலிம்பட கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் பொதுக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுத் தேவைகளில் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலை முறைமையினுள் உள்ள,

(i) மின்சார வசதியில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) நூல்நிலையம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) மின்சார வசதியில்லாத ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(v) தளபாடம் தேவையாகவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(vi) மேற்படி குறைபாடுகள் நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1026/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2008, 2009, 2010 ஆகிய வருடங்களில் இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடுகளாக கிடைத்த நிதித் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி வருடங்களில் போதுமானளவு வெளிநாட்டு முதலீடுகள் இலங்கைக்கு கிடைத்தனவா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1138/ '11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம். அஸ்வர்,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அட்டாளைச்சேனை ஆலங்குளம் பிரதேசத்தில் பல ஆண்டுகளாக முஸ்லிம் விவாகப் பதிவாளரொருவர் இல்லாமை காரணமாக அங்குள்ள மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கிறார்கள் என்பதையும்,

(ii) 300இற்கு மேற்பட்ட குடும்பங்களும் 1500இற்கு மேற்பட்ட மக்கள் தொகையும் காணப்படும் ஆலங்குளம் பிரதேசத்தில் மக்கள் விவாகப் பதிவிற்காக 15மைல்களுக்கு அப்பாலுள்ள அட்டாளைச்சேனை முஸ்லிம் விவாகப் பதிவாளரிடம் செல்லவேண்டியுள்ளது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) அவசரமாக நடைபெறும் விவாகங்களைத் தாமதமின்றி பதிவு செய்வதற்கு முடியுமான வகையில் ஆலங்குளம் பிரதேசத்திற்கு முஸ்லிம் விவாகப் பதிவாளர் பிரிவொன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0561/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கே.போர்ட் லிமிடெட் அரசாங்க நிறுவனமொன்றிடமிருந்து ஏழு (7) ஏக்கர் விஸ்தீரணமுள்ள கட்டிடமொன்றையும், வாடகைக்கு விடக்கூடிய பதினெட்டு (18) கட்டிடங்களையும் குத்தகைக்கு விடுவதற்காக வாடகைக்குப் பெற்றுள்ளதா என்பதையும்,

(ii) அவர்கள் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் மற்றும் அதன் நிபந்தனைகளையும்,

(iii) மேற்படி காணி மற்றும் சொத்துக்கள், முதலீட்டுச்சபையின் விலக்குகளைப் பயன்படுத்தி குத்தகைக்கு விட்டதன் நோக்கம் யாதென்பதையும்,

(iv) முதலீட்டுச்சபை விலக்குகளின் அடிப்படையில் செய்துகொள்ளப்பட்ட அக்கொடுக்கல் வாங்கல்களினால் நாட்டிற்கு ஏற்பட்ட நன்மையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி குத்தகையானது ஓர் உரிய கேள்விப்பத்திர முறையைப் பின்பற்றியா அல்லது அரசாங்க விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பீட்டின் அடிப்படையிலா நடைபெற்றது என்பதையும்,

(ii) அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பை மதிப்பீடு செய்வதற்கு முறையானதொரு விலைமதிப்பீட்டு செயற்பாட்டை பின்பற்றாமையால் தனியார் விலை மதிப்பீடொன்று பெறப்பட்டதாவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) 2004 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டுவரை, தனியார் கம்பனிகளுக்கு வாடகைக்கு விடப்பட்ட, குத்தகைக்கு விடப்பட்ட அல்லது விற்கப்பட்ட அரசாங்க நிறுவனங்களின் எண்ணிக்கையை அவர் வருடவாரியாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0824/ '10

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் முலடியன வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் வரும் திஹகொட கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் பொதுக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுத் தேவைகளில் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலை முறைமையினுள் உள்ள,

(i) மின்சார வசதியில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) நூல்நிலையம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) மின்சார வசதியில்லாத ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(v) தளபாடம் தேவையாகவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(vi) மேற்படி குறைபாடுகள் நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0859/ '10

கௌரவ அஜித் குமார,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) காலி பஸ் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்டுள்ள செலவு எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி மதிப்பீட்டை தயாரித்த நிறுவனம் யாதென்பதையும்,

(iii) குறித்த மதிப்பீடு மற்றும் கட்டடத்தின் திட்டவமைப்பு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இந்தக் கருத்திட்டத்திற்கு ஏற்புடைய,

(i) ஒப்பந்தக்காரர் அல்லது ஒப்பந்தக்காரர்கள் யாரென்பதையும்,

(ii) ஆலோசனை கம்பனி அல்லது நிறுவனமொன்று இருப்பின் அது யாதென்பதையும்,

(iii) மேற்பார்வை செய்கின்ற நிறுவனம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பஸ் நிலையத்தின் இயல்பு மற்றும் சம்பந்தப்பட்ட கட்டடத்தில் நடத்திச்செல்ல உத்தேசித்துள்ள நிறுவனங்கள் அல்லது தொழில்முயற்சிகள் யாவையென்பதையும்,

(ii) இந்தக் கால கட்டத்தில் வியாபார நிலையங்களை வழங்கும் போது பின்பற்றும் வழிமுறை யாதென்பதையும்,

(iii) பஸ் நிலையம் நிர்மாணிக்கப்படுவதற்கு இணையாக பஸ் நிலையத்தை அண்டிய அத்துடன் காலி நகரின் ஏனைய பிரதேசங்களினின்று வெளியேற்றப்பட்ட நடைபாதை வியாபாரிகள் மற்றும் தற்காலிக வியாபார நிலையங்களைக் கொண்டிருந்தவர்களுக்கு வழங்கும் நிவாரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1034/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நடந்த யுத்தம் காரணமாக கிழக்கு மாகாணத்தில் விதவையாக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி பெண்களுக்காக அரசாங்கத்தின் தலையீட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் சேமநலக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்,

(iii) தற்போது நடைமுறைப்படுத்தப்படும் சேமநலக் கருத்திட்டங்கள் மேற்படி விதவைப் பெண்களுக்கு நிவாரணம் அளிப்பதற்குப் போதுமானதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1139/11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம். அஸ்வர்,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் இஹல கஹகொல்லாவ கிராமத்திற்கு இன்றுவரை மின்சாரம் வழங்கப்படாமை காரணமாக அங்குள்ள மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பதையும்,

(ii) குறித்த கிராமத்தின் பாதைகளுக்கு மேலால் அதி சக்திவாய்ந்த பிரதான மின் கம்பிகள் செல்கின்றபோதிலும் இன்றுவரை மின்சாரம் இல்லாமல் இருளில் இருக்கவேண்டிய நிலையிலுள்ள அந்தக் கிராம வாசிகள் மிகவும் துரதிஷ்டமான நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) அவ்வாறாயின், இஹல கஹகொல்லாவ கிராமத்திற்கு மின்சாரத்தைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0562/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹம்பாந்தோட்டை துறைமுகக் கருத்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் ஒப்பந்தக்காரர்களின் பெயர்களையும்,

(ii) கேள்வி பத்திர செயன்முறை மூலமாகவா மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யப்பட்டனர் என்பதையும்,

(iii) அவ்வாறாயின், கேள்விப்பத்திரதாரர்களின் பெயர்களையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஹம்பாந்தோட்டை துறைமுகக் கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டமானது எப்போது ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படும் என்பதையும்,

(ii) அதற்கு எவ்வாறு நிதியிடப்படும் என்பதையும்,

(iii) வட்டி மற்றும் நிர்மாணச் செலவு ஆகியவற்றினடிப்படையில் மொத்தச் செலவினையும்,

(iv) அடுத்த 6 வருடங்களுக்கான காசுப்பாய்ச்சல் எதிர்வு கூறலையும்,

(v) மூலதனச் செலவு மற்றும் வட்டிச் செலவு, ஏனைய இயக்குச் செலவுகள் மற்றும் அடுத்த 10 வருடங்களுள் பெறப்படவுள்ள வருமானம் ஆகியவை உள்ளிட்ட காசுப்பாய்ச்சல் கூற்றினை வருட அடிப்படையிலும்

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஹம்பாந்தோட்டை துறைமுகக் கருத்திட்ட நிர்மாணச் செலவுகளுக்க எடுத்த கடனை மீளச் செலுத்த கொழும்புத் துறைமுகத்தின் வருமானம் பயன்படுத்தப்படுமா என்பதையும்,

(ii) கடனை மீளச் செலுத்தத் தொடங்க வேண்டிய திகதியினையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

இன்றேல், ஏன்?

0825/ '10

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் முலடியன வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் வரும் முலடியன கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் பொதுக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுத் தேவைகளில் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலை முறைமையினுள் உள்ள,

(i) மின்சார வசதியில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) நூல்நிலையம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) மின்சார வசதியில்லாத ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(v) தளபாடம் தேவையாகவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(vi) மேற்படி குறைபாடுகள் நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1035/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நடந்த யுத்தம் காரணமாக வடக்கு மாகாணத்தில் விதவையாக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி பெண்களுக்காக அரசாங்கத்தின் தலையீட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் சேமநலக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்,

(iii) தற்போது நடைமுறைப்படுத்தப்படும் சேமநலக் கருத்திட்டங்கள் மேற்படி விதவைப் பெண்களுக்கு நிவாரணம் அளிப்பதற்குப் போதுமானதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1140/ '11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச் எம் அஸ்வர்,— கலாசார, கலை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சுமார் 90,000 மக்கள் வசிக்கும் திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் கலாசார மத்திய நிலையமொன்று இல்லாமையால் அங்குள்ள கலை இலக்கிய ஆர்வலர்கள் தமது கலைத் திறமைகளை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பின்றி இருக்கின்றார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், நூல் வெளியீடு, கவி அரங்கு, விவாத அரங்கு மற்றும் ஏனைய கலை நிகழ்ச்சிகளை நடத்தி இவர்களின் திறமைகளையும் ஆளுமையையும் விருத்தி செய்வதற்காக சகல வசதிகளுடன் கூடிய கலாசார மத்திய நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1144/ '11

கௌரவ அஜித் குமார,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென்ற இலங்கையர்களில்,

(i) காயமடைந்தவர்களின் (பல்வேறு விபத்துக்களுக்கு உள்ளாகிய) எண்ணிக்கை,

(ii) தொழில்களை இழந்து நாடு திரும்பியர்களின் எண்ணிக்கை,

(iii) நலன்புரி நிலையங்களில் தங்கி உள்ளவர்களின் எண்ணிக்கை,

(iv) 2005 ஆம் ஆண்டில் இறந்தவர்களின் எண்ணிக்கை

வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பாதிக்கப்பட்டவர்களுக்காக அரசாங்கம் ஏதேனுமொரு நிவாரண வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியதா என்பதையும்,

(ii) ஆமெனில், இவர்களுக்காக வழங்கப்பட்ட நிவாரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2011, யூன் 09, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0479/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் வகிபாகம் யாதென்பதையும்,

(ii) பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் விசாரிக்கப்பட்டு வரும் சட்ட விரோத கொடுக்கல் வாங்கல் விவகாரங்களின் எண்ணிக்கையையும்,

(iii) விசாரணை மேற்கொள்ளப்பட்ட வழக்குகள் மற்றும் அவற்றின் பெயர்கள் என்பவற்றையும்,

(iv) விசாரணைகளின் இற்றை வரையிலான பெறுபேறுகள் யாதென்பதையும்,

(v) வழக்குகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளனவா அல்லது அபராதம் விதிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(vi) விதிக்கப்பட்ட அபராதத் தொகைகளையும் ஒவ்வொரு வழக்கும் எப்போது தீர்த்து வைக்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0632/ '10

கௌரவ அனுர திஸாநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யுத்தத்தின் பின்னர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள எல்.ரி.ரீ.ஈ. அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு ஏற்புடைய குற்றச்சாட்டுகள் ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) இவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள முகாம்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) அந்த முகாம்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள எல்.ரி.ரீ.ஈ. அல்லாத சந்தேக நபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி சந்தேக நபர்களின் பெயர்ப் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், அப்பெயர்ப் பட்டியலைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்,

(iv) மேற்படி சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்,

(v) மேற்படி குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்படும் திகதி யாதென்பதையும்,

(vi) மேற்படி வழக்கு விசாரணை நடாத்தப்படும் நீதிமன்றம் எது என்பதையும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0804/ '10

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மாத்தறை மாவட்டத்தின் அகுரெஸ்ஸ வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் வரும் வெலிபிட்டிய கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் பொதுக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுத் தேவைகளில் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலை முறைமையினுள் உள்ள,

(i) மின்சார வசதியில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) நூல்நிலையம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கையையும்,

(iv) மின்சார வசதியில்லாத ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கையையும்,

(v) தளபாடம் தேவையாகவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கையையும்,

(vi) மேற்படி குறைபாடுகள் நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0999/ '10

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உலகின் நீர்ப்பாசன விவசாய நாகரிகத்துக்கேற்ப இலங்கைக்கு மிக முக்கிய இடம் உரித்தாவதானல் இந்நிலைமையை எதிர்கால சந்ததிக்கு பெற்றுக்கொடுக்கக் கூடிய வகையில் நீர் மற்றும் நீர்ப்பாசன நூதனசாலையொன்றை நிர்மாணிப்பது பொருத்தமானதென்பதையும்,

(ii) அதனூடாக இலங்கையின் விவசாய மற்றும் நீர்ப்பாசனத் துறையின் வரலாறு தொடர்பாக எதிர்கால சந்ததிக்கு கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும் என்பதையும்,

(iii) மேற்படி நூதனசாலையை நிர்மாணிப்பதனூடாக நீர்ப்பாசன மற்றும் விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி நூதனசாலையை நிர்மாணிப்பதை துரிதமாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1025/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007, 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் அறிக்கையிடப்பட்ட தொழிலற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்,

(ii) பட்டதாரிகளின் தொழில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்,

(iii) இந்நடவடிக்கைகள், பட்டதாரிகளின் தொழில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு போதியனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1047/ '10

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பணியாற்றுகின்ற தொண்டர் ஆசிரியர்களை ஆசிரிய உதவியாளர்களாக நியமிப்பது தொடர்பாக 2006.10.25 ஆம் திகதி அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமொன்றுக்கமையவும் கல்வி அமைச்சின் ED/2/20/4/1/47உப ஆம் இலக்க, 2007/02/10 ஆம் திகதிய அறிவுறுத்தல்களுக்கமையவும், மத்திய மாகாண கல்வி அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதற்கமைய மத்திய மாகாணத்தில் ஆசிரிய உதவியாளர் பதவிக்காக விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) நேர்முகப் பரீட்சையில் மேற்படி பதவிக்கு தகைமை பெற்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) இவர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவை என்பதையும்,

(iv) இவர்களில் ஏற்கெனவே மேற்படி நியமனங்களைப் பெற்ற ஆட்களின் எண்ணிக்கை, இவர்களின் பெயர்களும் முகவரிகளும் கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்குரிய கல்வி வலய மட்டத்தில் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0770/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2009, 2010 ஆகிய ஆண்டுகளில்,

(i) மதுபான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டனவா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், பல்வேறு வகைப் பிரிவுகளின் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையையும்,

(iii) வழங்கப்பட்ட புதிய அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையை மாவட்ட அடிப்படையிலும்,

(iv) அனுமதிப்பத்திர விநியோகத்தின் மூலம் ஈட்டப்பட்ட வருமானத்தையும்,

(v) அனுமதிப்பத்திரங்கள் ஏதும் இரத்துச் செய்யப்பட்டனவா என்பதையும்,

(vi) அவ்வாறாயின், அனுமதிப்பத்திரங்கள் இரத்துச்செய்யப்பட்ட வகைகளின் பெயர்கள் யாதென்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0826/ '10

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் முலடியன வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் வரும் ஹக்மண கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் பொதுக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுத் தேவைகளில் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலை முறைமையினுள் உள்ள,

(i) மின்சார வசதியில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) நூல்நிலையம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) மின்சார வசதியில்லாத ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(v) தளபாடம் தேவையாகவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(vi) மேற்படி குறைபாடுகள் நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1029/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு முடிவடைகின்றபோது இலங்கையிலிருந்த மொத்தக் கர்ப்பிணித் தாய்மார்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அரசாங்கத்தின் தலையீட்டில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போஷாக்குப் பங்கீட்டைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதையும்,

(iii) ஆமெனில், போஷாக்குப் பங்கீடு வழங்கப்படுகின்ற தாய்மார்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

(iv) கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போஷாக்குப் பங்கீட்டை வழங்குகின்ற பிரதேச செயலகப் பிரிவுகள் யாவையென்பதையும்,

(v) அவ்வாறு வழங்கப்படுகின்ற போஷாக்குப் பங்கீடு கர்ப்பிணித் தாய்மார்களின் போஷாக்குத் தேவையைப் பெற்றுக் கொடுப்பதற்குப் போதுமானதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1048/ '10

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தொண்டர் ஆசிரியர்களை, ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் செய்வது தொடர்பிலான 2006.10.25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் கல்வி அமைச்சின் ED/2/20/4/1/47 உப எனும் இலக்க, 2007.02.10 ஆம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு அமைய, மத்திய மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் கோரலுக்கு அமைய மாத்தளை மாவட்டத்தின் நாஉல, வில்கமுவ, கலேவெல, மாத்தளை ஆகிய கல்வி வலயங்களிலிருந்து முன்வந்திருந்த விண்ணப்பதாரிகளில் 31 பேர் நேர்முகப் பரீட்சையின் போது அப்பதவிக்கு தகுதி பெற்றுள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) கல்வி அமைச்சுச் செயலாளரின் ED/2/29/4/1/47 List எனும் இலக்க, 2008.09.08 ஆம் திகதிய கடிதம் மூலம் இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குமாறு மத்திய மாகாண கல்விச் செயலாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) இதுவரை காலம் மேற்படி நியமனங்களை வழங்குவதற்குப் பதிலாக 2010.02.10 ஆம் திகதி ஆசிரியர் பயிற்சிக்கான நிலையங்களுக்கு இணைத்து, கல்வி செயலாளரினால் ED/1/20/6/24 ஆம் இலக்கத்தின் கீழ் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை மட்டுமே நடைபெற்றுள்ளது என்பதையும்,

(iii) இந்நிலைமையினால் ஆசிரியர் உதவியாளர் நியமனம் பெறுவதற்குள்ள மேற்படி நபர்கள் தொடர்ந்தும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அவ்வாறாயின், இர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1137/ '11

கௌரவ அநுர திஸாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொரட்டுவ மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தின், இடம, பீரிஸ் மாவத்தையில், யூ.சீ.லேன்ட் (U.C. Land) எனும் பெயரிலுள்ள 515 A வரைபட இலக்கத்தைக் கொண்ட, 0.64516 ஹெக்டெயர் பரப்பளவுடைய காணி, 44 காணித் துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு காணி பெறுனர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) இக் காணி பெறுனர்களுக்கு உறுதிகள் கிடைக்காமை சம்பந்தமாக 2009 செப்டெம்பர் 24 ஆம் திகதி முன்னாள் உள்ளூராட்சி அமைச்சரிடம் பாராளுமன்றத்தில் வாய்மூல வினாவொன்று கேட்கப்பட்டதென்பதையும்,

(iii) அதற்குப் பதிலளித்து உரிய உறுதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(iv) இருப்பினும் இதுவரை மேற்படி காணிகளுக்கு உரித்துரிமை உறுதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) மேற்படி காணி பெறுனர்களுக்குத் துரிதமாக உரித்துரிமை உறுதிகளைப் பெற்றுக்கொடுப்தற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0771/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 6 வருடங்களில், அரசாங்கம் அதன் செயற்பாடுகளுக்கு நிதி வழங்கும் முகமாக கடன் பெற்றுள்ளதா என்பதையும்,

(ii) முதலும் வட்டியுமாக 2011, 2012, 2013, 2014, 2015 ஆகிய ஆண்டுகளுக்கான எதிர்வு கூறப்பட்ட மொத்தப் படுகடன் மீள்கொடுப்பனவையும்,

(iii) முதலும் வட்டிச் செலவினமாக 2003, 2004, 2005 ஆகிய ஆண்டுகளுக்கான மொத்தப்படுகடன் மீள்கொடுப்பனவையும்,

(iv) 2008, 2009, 2010 ஆகிய ஆண்டுகளில் எஞ்சிய கொடுப்பனவு பற்றாக்குறையையும்,

(v) 2011, 2012, 2013, 2014 ஆகிய ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் எஞ்சிய கொடுப்பனவு பற்றாக்குறையை அல்லது தொகையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0929/ '10

கௌரவ புத்திக பத்திரன,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் வெலிப்பிட்டிய பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் 375/B ஹபந்து கொக்மாதுக கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள தெல்கஹவல நீர்த்தேக்கத்தின் கீழ் சாகுபடி செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கரளவு யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நீர்த்தேக்கம் கிட்டத்தக்க ஏழு (07) ஏக்கர் பரப்பளவுடைய ஏறக்குறைய நூறு (100) ஆண்டுகள் பழமைவாய்ந்த நீர்த்தேக்கம் என்பதையும்,

(ii) ஏறக்குறைய 10 வருடங்களாக இரண்டு ஆட்களினால் மேற்படி குளத்திற்கு உரிமைபாராட்டப்பட்டு வருவதனால் வயற்காணிகளுக்கு நீரைப் பெற்றுக் கொள்ள தடையேற்பட்டுள்ளதென்பதையும்,

(iii) தற்போது இது காடுமண்டி வயற்காணிகளுக்கு நீரைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையை அடைந்துள்ளதென்பதையும்,

அவர்அறிவாரா?

(இ) (i) மேற்படி நீர்த்தேக்கத்தை அரசாங்கம் மீண்டும் சுவீகரித்தேனும் புனரமைத்து, வயற்காணிகளைப் பயிர்செய்ய அவசியமான நீரை வழங்க நடவடிக்கை எடுப்பாரா,

(ii) ஆமெனில், அதற்காக எடுக்கும் காலம் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1031/ '10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டின் இறுதியாகும்போது இலங்கையின் பெருந்தோட்டங்களில் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருந்த சிசுக்களின் சதவீதம் யாது,

(ii) இந் நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை,

(iii) அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் அந்நடவடிக்கைகள் மேற்படி சிசுக்களின் போஷாக்குத் தரத்தை மேம்படுத்த போதுமானதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1168/ '11

கௌரவ அனுர திசாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முட்டைகள் மற்றும் கோழி இறைச்சி விலைகள் அதிகரிக்கின்ற நெருக்கடிக்கு மத்தியில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் மற்றும் கோழி இறைச்சியின் அளவு வெவ்வேறாக எவ்வளவு,

(ii) வெளிநாட்டிலிருந்து முட்டையொன்றை இறக்குமதி செய்யும்போது கொள்வனவுச் செலவு, துறைமுகக் கட்டணம் மற்றும் போக்குவரத்து கட்டணங்கள் வெவ்வேறாக எவ்வளவு,

(iii) அதன்படி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட முட்டையொன்றின் விலை மற்றும் அந்த முட்டை சந்தையில் விற்கப்பட்ட விலை யாது

என்பதை இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2011, யூன் 10, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0581/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கலாசார, கலை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த ஐந்து வருடங்களில் கலாசார முக்கோணத்திற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை வருடவாரியாகவும்,

(ii) கலாசாரா முக்கோணத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களிலிருந்து ஈட்டிக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு செலாவணித் தொகையையும்,

(iii) பௌத்த மதத்தின் மேம்பாட்டிற்கும் சுற்றுலாப் பயணிகளுக்கான சந்தையை ஈர்ப்பதற்கும் கலாசார முக்கோணத்தை நாங்கள் ஏன் பயன்படுத்துவதில்லை என்பதையும்,

(iv) ஏற்கனவே அவ்வாறு செய்யப்பட்டிருப்பின் இவ்விடயம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பௌத்த சுற்றுலாப் பயணியொருவரின் கண்ணோட்டத்தில் அத்தகைய ஆர்வத்தைத் தூண்டக்கூடிய இலங்கையில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஏனைய ஐந்து இடங்களையும்,

(ii) வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைத் தரமுயர்த்துவதற்கும் பாதுகாப்பதற்கும் மேற்படி நடவடிக்கை மூலம் ஈட்டப்பட்டவைகளிலிருந்து அரசாங்கம் பௌத்த வணக்கஸ்தலங்களுக்குப் பணம் வழங்குகிறதா என்பதையும்,

(iii) அவ்வாறெனின், இவ்வணக்கத்தலங்களின் அல்லது இடங்களின் பெயர்களையும் கடந்த ஐந்து வருடங்களில் மேற்கூறியவாறு கிடைக்கப்பெற்ற பணத்தொகையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0930/ '10

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் மாத்தறை வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் வரும் மாத்தறை கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்கப் பாடசாலைகளில்,

(i) துப்பரவு ஏற்பாட்டு வசதிகளற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அப்பாடசாலைகளின் பெயர், முகவரிகள் யாவை,

(ii) கட்டிடத் தேவைப்பாடு கொண்ட பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் தேவைப்படும் கட்டிடங்களின் எண்ணிக்கை யாது,

என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதனால் இப்பாடசாலைகளின் கல்வியில் தர ரீதியான அபிவிருத்தி ஏற்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) அவ்வாறாயின், இத்தேவைகளை நிறைவு செய்வதற்குத் தேவையான நிதியை இப்பாடசாலைகளுக்கு வழங்க அவர் நடவடிக்கை மேற்கொள்வாரா,

(ii) இதற்கு எவ்வளவு காலம் தேவைப்படும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1007/ '10

கௌரவ அகில விராஜ் காரியசவம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அரசாங்க பாடசாலை முறைமையில் உள்ள பதில் அதிபர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) பதில் அதிபர்கள் உள்ள பாடசாலைகளில், அதிபர்களாக கடமையாற்றுவதற்கான தகைமைகளைக் கொண்ட கல்வி நிர்வாக சேவையில் சித்தியடைந்துள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) அதற்கு மேலதிகமாக, மேற்படி பாடசாலைகளில் அதிபர் பதவிகளை வகிப்பதற்கு தகைமையுள்ள அதிபர் தரங்களில் சித்தியடைந்துள்ள அதிபர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) மேற்படி அதிபர்கள் குறித்த பதவிகளுக்கு நியமனம் செய்யப்படாமைக்கான காரணங்கள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நாட்டிலுள்ள இசுறு பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) நவோதய பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைகளுக்கு கடந்த 5 வருடங்களில் ஒதுக்கப்பட்ட நிதித்தொகை தனித்தனியே எவ்வளவு என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) வடமேல் மாகாண சபையின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற பாடசாலைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள பணியாள் தொகுதி, ஒவ்வொரு பதவிக்கும் அமைய தனித்தனியே யாதென்பதையும்,

(ii) அவ்வாறு ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பாடசாலைகள் எவை என்பதையும்,

(iii) ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யும் நடைமுறை எது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1038/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையின் பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலுகின்ற மாணவ மாணவிகளுக்கு கல்வியை வளர்த்துக்கொள்வதற்கு வழங்கப்படும் சலுகைகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி சலுகைகளைப் பெற்றுக்கொள்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) தற்போது மாணவர் உதவித் தொகையைப் பெற்றுக்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) பெற்றுக்கொடுக்கப்படும் மாணவர் உதவித் தொகைகள் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு போதுமானதா என்பதையும்,

(v) போதியதாயில்லாதிருப்பின் அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1049/ '10

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தொண்டர் ஆசிரியர்களை, ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் செய்வது தொடர்பிலான 2006.10.25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் கல்வி அமைச்சின் ED/2/20/4/1/47 உப எனும் இலக்க, 2007.02.10 ஆம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு அமைய, மத்திய மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் கோரலுக்கு அமைய நுவரெலியா மாவட்டத்தின் வலப்பனை, நுவரெலியா, ஹங்குரன்கெத்த, கொத்மலை மற்றும் ஹட்டன் ஆகிய கல்வி வலயங்களிலிருந்து முன்வந்திருந்த விண்ணப்பதாரிகளில் 50 பேர் நேர்முகப் பரீட்சையின் போது அப்பதவிக்கு தகுதி பெற்றுள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) கல்வி அமைச்சுச் செயலாளரின் ED/2/29/4/1/47 List எனும் இலக்க, 2008.09.08 ஆம் திகதிய கடிதம் மூலம் இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குமாறு மத்திய மாகாண கல்விச் செயலாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) இதுவரை காலம் மேற்படி நியமனங்களை வழங்குவதற்குப் பதிலாக 2010.02.10 ஆம் திகதி ஆசிரியர் பயிற்சிக்கான நிலையங்களுக்கு இணைத்து, கல்வி செயலாளரினால் ED/1/20/6/24 ஆம் இலக்கத்தின் கீழ் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை மட்டுமே நடைபெற்றுள்ளது என்பதையும்,

(iii) இந்நிலைமையினால் ஆசிரியர் உதவியாளர் நியமனம் பெறுவதற்குள்ள மேற்படி நபர்கள் தொடர்ந்தும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அவ்வாறாயின், இர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1145/ '11

கௌரவ அஜித் குமார,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலநோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு ஒக்தோபர் வரை தென் கொரியாவுக்குச் சென்ற இலங்கையர்களின் எண்ணிக்கை, வருடாந்த ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) இவர்களில், பயிற்றப்பட்ட ஊழியர்கள் மற்றும் பயிற்றப்படாத ஊழியர்களின் எண்ணிக்கை மாவட்ட ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தென்கொரியாவுக்கு தொழில்வாய்ப்புக்காக அனுப்பி வைக்கப்படுகின்ற நபரொருவருக்கான விமானப் பயணச்சீட்டின் பெறுமதி யாது,

(ii) மேற்படி பெறுமதியில் நபரொருவரிடமிருந்து அறவிடப்பட்ட பணத்தொகை யாது,

(iii) அரசாங்கம் வழங்கிய பங்கு யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0658/ '10

கௌரவ ரவி கருணநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் நிதிச்செயற்பாடுகளையும் ஒழுங்கு விதிகளையும் கண்காணிக்கும் அரசாங்க நிறுவனங்களையும்,

(ii) இலங்கை மத்திய வங்கி எப்போது தோற்றுவிக்கப்பட்டது என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2005 முதல் இற்றைவரை வங்குரோத்து நிலையடைந்த நிதிக் கம்பனிகள் வங்குரோத்து நிலமையடைந்தமைக்கான காரணத்தையும்,

(ii) மேற்குறிப்பிட்ட நிதிக் கம்பனிகள் மோசமாகச் செயற்பட்ட பொழுது அவற்றிற்கெதிராக இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்னவென்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) இந்நிதிக் கம்பனிகளினால் செலுத்தப்பட வேண்டிய மொத்தத் தொகையையும்,

(ii) பணம் செலுத்தப்பட்ட வைப்பாளர்களது எண்ணிக்கையையும்,

(iii) அவர்களுக்கு செலுத்தப்பட்ட தொகையையும்,

(iv) மேற்படி காலப்பகுதியில் பணியாற்றிய இலங்கை மத்திய வங்கி ஆளுனரின் பெயர் என்ன என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0931/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தென் மாகாணத்தின் பாடசாலைகளில் தற்போது சுமார் பத்து வருட காலமாக தொண்டர் அடிப்படையில் கடைமையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் சிலர் எவ்விதமான கொடுப்பனவையும் பெறாது கடைமையாற்றுகின்றனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு கடைமையாற்றுகின்ற ஆசிரியர்களின் பெயர்கள் மற்றும் எண்ணிக்கை, கல்வி வலய மட்டத்தில் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(ii) மேற்படி ஆசிரியர்கள் எத்தகைய பாடங்களை கற்பிப்பதற்காக ஆட்சேர்க்கப்பட்டனர் என்பதையும்,

(iii) அவர்கள் ஆட்சேர்க்கப்பட்ட நடைமுறை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) நாட்டின் வேறு மாகாணங்களில் கடைமையாற்றிய தொண்டர் ஆசிரியர்கள் ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளனரென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) ஆமெனில், தென் மாகாணத்தின் தொண்டர் ஆசிரியர்களை ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அதற்காக எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1039/ '10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 டிசெம்பர் மாதமளவில் இலங்கையில் உள்ள வறுமையில் வாடும் குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) இந்த ஏழைக் குடும்பங்களின் மக்கள் தொகையின் சதவீதம் யாதென்பதையும்,

(iii) வறுமையைக் கணிப்பிடும்போது பின்பற்றப்படுகின்ற முறைமையியல் யாதென்பதையும்,

(iv) இந்த முறைமையியலின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கணிப்பீடு சரியானதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1050/ '10

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தொண்டர் ஆசிரியர்களை, ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் செய்வது தொடர்பிலான 2006.10.25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் கல்வி அமைச்சின் ED/2/20/4/1/47 உப எனும் இலக்க, 2007.02.10 ஆம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு அமைய, மத்திய மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் கோரலுக்கு அமைய கண்டி மாவட்டத்தின் கட்டுகஸ்தொட்ட, கம்பளை, தெல்தெனியா, வத்தேகம, தெனுவர மற்றும் கண்டி ஆகிய கல்வி வலயங்களிலிருந்து முன்வந்திருந்த விண்ணப்பதாரிகளில் 61 பேர் நேர்முகப் பரீட்சையின் போது அப்பதவிக்கு தகுதி பெற்றுள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) கல்வி அமைச்சுச் செயலாளரின் ED/2/29/4/1/47 List எனும் இலக்க, 2008.09.08 ஆம் திகதிய கடிதம் மூலம் இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குமாறு மத்திய மாகாண கல்விச் செயலாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) இதுவரை காலம் மேற்படி நியமனங்களை வழங்குவதற்குப் பதிலாக 2010.02.10 ஆம் திகதி ஆசிரியர் பயிற்சிக்கான நிலையங்களுக்கு இணைத்து, கல்வி செயலாளரினால் ED/1/20/6/24 ஆம் இலக்கத்தின் கீழ் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை மட்டுமே நடைபெற்றுள்ளது என்பதையும்,

(iii) இந்நிலைமையினால் ஆசிரியர் உதவியாளர் நியமனம் பெறுவதற்குள்ள மேற்படி நபர்கள் தொடர்ந்தும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அவ்வாறாயின், இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1146/ '11

கௌரவ அஜித் குமார,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலநோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு ஒக்தோபர் வரை, சைப்பிரசுக்குச் சென்ற இலங்கையர்களின் எண்ணிக்கை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) இவர்களில், பயிற்றப்பட்ட ஊழியர்கள் மற்றும் பயிற்றப்படாத ஊழியர்களின் எண்ணிக்கை மாவட்ட ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சைப்பிரசுக்கு தொழில்வாய்ப்புக்காக அனுப்பி வைக்கப்படுகின்ற நபரொருவருக்கான விமானப் பயணச்சீட்டின் பெறுமதி யாது,

(ii) மேற்படி பெறுமதியில் நபரொருவரிடமிருந்து அறவிடப்பட்ட பணத்தொகை யாது,

(iii) அரசாங்கம் வழங்கிய பங்கு யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0690/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட ரக்னா ஆரக்சன லங்கா கம்பனி எப்போது கூட்டிணைக்கப்பட்டது என்பதையும்,

(ii) அந் நிறுவனத்தின் பங்குதாரர்களினதும் பணிப்பாளர்களினதும் பெயர்களையும்,

(iii) மேற்படி கம்பனி பாதுகாப்புச் சேவை வழங்கும் அரசாங்கத் தாபனங்களின் பெயர்களையும்,

(iv) மேற்படி அரசாங்கத் தாபனங்களுக்கு பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்கான ஒப்பந்தம் முறையான கேள்விப் பத்திர நடைமுறைமூலமாக வழங்கப்பட்டதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 'ரக்னா ஆரக்சன லங்கா' நிறுவனத்தால் ஒரு பாதுகாப்பு அதிகாரிக்கு அறவிடும் கட்டணத்தையும்,

(ii) இச்சேவை பாதுகாப்புச் சேவைத் துறைக்கு மாற்றப்பட்ட தருணத்தில், பாதுகாப்புச் சேவையை வழங்கிவந்த தனியார்துறை கம்பனிகள் அறவிட்ட தொகையையும்,

(iii) வரையறுக்கப்பட்ட ரக்னா ஆரக்சன லங்கா கம்பனியின் பாதுகாப்பு அதிகாரியொருவருக்கு உரித்தான நாளாந்த மற்றும் மாதாந்த கொடுப்பனவு மற்றும் ஏனைய சலுகைகள் ஆகியவற்றையும்,

(iv) வரையறுக்கப்பட்ட ரக்னா ஆரக்சன லங்கா கம்பனியின் கடந்த மூன்று வருடங்களுக்கான இலாப நட்டக் கணக்குகளை வருடவாரியாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0932/ '10

கௌரவ புத்திக பத்திரன,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் காணப்படும் பதிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளின் எண்ணிக்கை, அவற்றின் பெயர்கள் மற்றும் முகவரிகள் என்பன உள்ளூர் அதிகார சபைகளுக்கேற்ப வெவ்வேறாக யாவை என்பதையும்,

(ii) மேற்படி முன்பள்ளி ஆசிரியர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை என்பதையும்,

(iii) மேற்படி முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளமொன்றை வழங்க தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதையும்,

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1040/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வறுமையை ஒழிப்பதற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் எவை,

(ii) இச்செயற்பாட்டில் உள்ளடங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) வறுமையை ஒழிப்பதற்கான இலக்குகள் தற்போதைய அரசின் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன் ?

1149/ '11

கௌரவ அஜித் குமார,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு முகவர் நிறுவனம் ஒன்றை பதிவு செய்வதற்காக அரசாங்கம் அறவிட்ட கட்டணத்தை வருடவாரியாக தனித்தனியே எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுகின்ற வெளிநாட்டு தொழில்வாய்ப்பு முகவர் நிறுவனங்கள் உள்ளனவா என்பதையும்,

(ii) அவை சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) அவ்வாறான நிறுவனங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.6/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்குதல்,— நாட்டினுள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் போன்றவற்றின் பாவனை வேகமாக அதிகரித்து வருவதாலும் அவ்வாறான கழிவுப் பொருட்களை பாரதூரமின்றி அகற்றுவதனால் ஏற்படும் பாரியளவு சுற்றாடல் மாசுபடுதல் நிமித்தமும் பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.7/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச வங்கிகளிலிருந்து கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுதல்,— அரச வங்கியிலிருந்து ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுவதற்காக சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.8/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் செயற்படுத்தல்,— பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்படும் தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பயனுள்ள பங்களிப்பொன்றாக அமைவதற்கு ஏதுவாக அவைகள் ஒரு வருடத்துக்குள் விவாதிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டால் ஆறு மாதங்களுக்குள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.9/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைத்தல்,— நாட்டில் தேசிய மனப்பாங்கை ஏற்படுத்துமுகமாக பாராளுமன்ற அமர்வு ஆரம்பமாக முன்னரும் ஒத்திவைக்க முன்னரும் பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைக்க வேண்டு மென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.10/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பலமான இலங்கை அடையாளத்தை ஏற்படுத்துதல்,— அரச ஆவணங்களில் ஒருவரது சாதியையும் சமயத்தையும் வெளிப்படுத்த வேண்டுமென்ற தேவைப்பாடு பலமான தேசிய அடையாளத்தை ஏற்படுத்துவற்கு தடையாகவும் இடர்ப்பா டகவுமுள்ளதால் இத்தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்று இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.11/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தக நோக்கங்களுக்காக சமயத் தலைவர்களின் உருவங்களை பயன்படுத்துவதை தடைசெய்தல்,— சகல சமயங்களும் சமமாக மதிக்கப்படல் வேண்டுமென்பதுடன் புத்தபெருமான், யேசுநாதர், சிவபெருமான், முஹம்மட் நபி (ஸல்) அவர்கள் ஆகியோரின் உருவங்களை வர்த்தக விளம்பரங்களிலோ வேறுவிதமான சமயசார்பற்ற படிவங்களிலோ பயன்படுத்தலை தடைசெய்தலும் வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.12/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்குதல்,— சகலருக்கும் சமமான நியாயத்தை உறுதிப்படுத்துவதற்காக சனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு பலமான சுதந்திர ஊடகவியலை ஏற்படுத்துவதற்கும் நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறை களை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

பா.13/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கை களுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் மற்றும் நடாத்துதல், மாநகர சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.14/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசியல் கட்சிகளினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதி கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பித்தல்,— எல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் பெறப்பட்ட வருமானமும் செலவிடப்பட்ட செலவினமும் பற்றிய கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமெனவும் வருடம் தோறும் தேர்தல் ஆணைக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.15/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச அலுவலர்களுக்கு தண்டனை வழங்குதல்,— அரச உயர் அலுவலர்கள் தமது சுதந்திர நிலைமையை அரசியல் மயமாக்கி மற்றும் அவர்கள் முறைகேடாக நடந்தால் அதனால் அவர்கள் குற்றவாளிகளாக கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரங்களை கையளித்து தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.16/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்தல்,— அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால் விசேட திறமையுள்ள அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 70 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.17/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வியைப் பாதுகாப்பதற்காக தரப் பாதுகாப்பு பேரவையொன்றை நிறுவுதல்,— பொறுப்பற்ற முறையில் பல்கலைக்கழக பெயர்களை பாவித்து இலங்கையினுள் பல கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்படுவதனால் கல்வியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதற்காக "தரப் பாதுகாப்பு பேரவையொன்றை" சட்டத்தின் மூலம் உடனடியாக நிறுவ வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.18/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ‘விசேட வழக்குத் தொடுநர்’ எனப்படும் பதவியொன்றை உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்குவதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்றிறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்திறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு “விசேட வழக்குத் தொடுநர்” எனப்படும் பதவியொன்று உருவாக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.19/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்துதல்,— இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் போன்று, வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலுள்ள எதிரானதும் சார்பற்றதுமான தாக்கல்கள் ஏதும் இருப்பின் அவைகளை நிவர்த்தி செய்வதற்கும் தணிப்பதற்கும் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்தப்பட வேண்டு மென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.20/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துதல்,— அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பணங்களை செலுத்துவதில் ஒவ்வொரு வருடத்திற்கான பணவீக்க அளவுக்கு மேலதிகமாக 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.21/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரசைகளுக்கு இலவச பயண வசதிகள் ஏற்பாடு செய்தல்,— சகல சிரேஷ்ட பிரசைகளுக்கும் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் இலவச பயண வசதிகளை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.22/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்குதல்,— பல இன, மத மக்கள் வாழும் இலங்கையில் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் சவால்களை எதிர்நோக்குகின்றமையினால் அவைகளை இலங்கையிலும், பிராந்தியத்திலும் மற்றும் முழு உலகத்திலும் தீர்ப்பதற்காக பௌத்த, கிரிஸ்தவ, இந்து மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களின் ஒழுக்க நெறிகளைக் கொண்ட, தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.23/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு ஆகிய பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வூதியப் பணிக்கொடையைப் பெற்றிராத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.24/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய கொள்கையாக்க சபை ஒன்றினை நியமித்தல்,— முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள், மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.25/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலைசெய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில் ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள் ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.26/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— புதிய கண்டுபிடிப்பாளர்களை உலகிற்கு அறிமுகப்படுத்து முகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப்பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக்கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்து வதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற்காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.27/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ளும் உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.28/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.29/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்.— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.30/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை ஒரு வாரகாலத்தினுள் விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுத்தல்,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை மீளப்பெற விண்ணப்பிப்பவர்களுக்கு ஒரு வார காலத்தினுள் அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது

பா.31/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்கள் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேரூந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.32/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைகளை எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனாசிரியர் களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.33/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகளிற்கான கல்விப் பீடமொன்றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டு மென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.41/ '10

கௌரவ அஜித் குமார,— அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானவர்களுக்கான நிவாரணம் அளிக்குமுகமாக சனாதிபதி ஆணைக்குழு,— ஆரம்ப காலம் முதல் இன்றுவரை தாம் கொண்ட அரசியல் கொள்கை காரணமாக அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்து நிவாரணம் வழங்குவதற்காக பூரண அதிகாரமுடைய சனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.42/ '10

கௌரவ அஜித் குமார,— 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தைத் திருத்துதல்,— இலங்கையில் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் காணி உரிமை பலவித உரிமங்களின் கீழ் வருவதுடன் மேற்படி சட்டத்தினால் வாரப் பயிர்ச்செய்கை முறை ஒழிக்கப்பட்டதனால் தாங்கள் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள காணிகளையும் இழக்க நேர்ந்துள்ளதனாலும் சட்டத்தினால் பாதுகாப்பு இல்லாததால் பலவித காணித்தகராறுகள் ஏற்படுகின்றதனாலும் வாரப்பயிர்ச் செய்கையாளர்களுக்கு ஏற்பட்ட அநீதியை ஒழிப்பதற்காக 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமத்தொழில் அபிவிருத்தி சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

பா.43/ '10

கௌரவ அஜித் குமார,— உஸ்ஸன்கொட மலைத்தொடர் அமைந்துள்ள நிலப் பரப்பைப் பேணிப் பாதுகாத்தல்,— வரலாற்றுக்கு முந்திய யுகத்தில் மத்திய முன்னைய காலத்திற்குரியதென இனங்காணப்பட்டுள்ளதும் தென் மாகாணத்தில் அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் கடற்கரையோரத்தில் அமைந்துள்ளதும் தென்னிலங்கையின் ஹோர்டன் சமவெளி எனப் பிரபல்யமடைந்துள்ளதுமான உஸ்ஸன்கொட மலைத்தொடர் அமைந்துள்ள நிலப்பரப்பு, இலங்கையில் இருபத்தெட்டாயிரம் வருடங்கள் பழமை வாய்ந்த திறந்த வெளிக் குடியேற்றமொன்றின் கேத்திரவடிவ ஆயுதங்களும் பாறைகளும் கண்டுபிடிக்கப்பட்ட நிலப்பகுதியாகவும் கடல் மற்றும் தரை உயிரியல் பல்வகைத் தன்மையில் பெருமளவு வளங்கள் நிறைந்த நிலப்பகுதியாகவும், சிறந்த கடலாமைகளின் வாழ்விடமாகவும், சுனாமிப் பேரலையினால் மக்களைப் பாதுகாத்த மதிலாகவும் அதிக பெறுமதியை கொண்டிருப்பதனால் இந்நிலப்பகுதியில் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களை நிறுத்தி விட்டு உடனடியாகப் பேணிப் பாதுகாக்க வேண்டிய சுற்றாடல் தொகுதியொன்றாக பிரகடனப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.44/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசாங்க தகவல்களை சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்காக சட்டங்களை இயற்றுதல்,— அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை பேணுவதற்கும் பொதுமக்கள் அனைத்து அரசாங்க தகவல்களையும் சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்கான உரிமைக்காகவும் பாராளுமன்றத்தில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.45/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்குதல்,— மக்களில் அதிகமானோர் இருதய சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய தேவை உடையவர்களாய் இருப்பதால் இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்க வேண்டியிருப்பதாலும் அதற்காக தனியார் துறை ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் அல்லது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினூடாக இலவசமாக வசதிகளை செய்துகொடுக்க வேண்டும் என்றும் அரசாங்க ஊழியர்கள் அல்லது தொழிலற்றோருக்கு அதற்கான முழு செலவையும் அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தினூடாக வழங்குதல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.46/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உலக சுற்றாடலை பாதுகாத்தல்,— இலங்கை உலக சுற்றாடலை பாதுகாக்கும் பொருட்டு கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்பதோடு புவி வெப்பமாதலை தவிர்ப்பதற்காக குறிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.47/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற நடவடிக்கைகளை ஒளிபரப்புதல்,— தொலைக்காட்சி அல்லது இணையம் மூலமாக பாராளுமன்ற நடவடிக்கைகள் நேரடியாக அல்லது தணிக்கை செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.48/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர்களுக்கு வாக்களிப்பதற்கான அனுமதியை வழங்குதல்,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர் களுக்கு எதிர்கால தேர்தல்களில் வாக்களிப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.49/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையினை அறிமுகப்படுத்துதல்,— தற்போதுள்ள பழைமையான வாக்களிப்பு முறைமைக்குப் பதிலாக இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.50/ ’10

கௌரவ அஜித் குமார,— இலங்கையில் மிகப் பெறுமதியான இயற்கை வளங்கள் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களை பாதுகாப்பதற்காக முறையான விஞ்ஞான ரீதியிலான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்,— இலங்கையில் மாத்திரமல்லாது உலகிலேயே மிக முக்கியமான இயற்கை வளமாகக் கருதப்படும் சிங்கராஜ காடு, கன்னெலிய பாதுகாப்பு வனம், ரூமஸ்சல கந்த, கொக்கல ஓயா தீவுக் கூட்டல்கள் மற்றும் கண்டல் மரங்கள், மாது கங்கை, ரம்சா ஈரழிப்பு நிலம் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்கள் என்பவற்றை பாதுகாப்பதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்கும் முறையான விஞ்ஞான ரீதியிலான திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.51/ '10

கௌரவ அஜித் குமார,— காலி கோட்டை மற்றும் அதனை அண்டியுள்ள வரலாற்று ரீதியான மற்றும் தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும் உரிய பயனைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— சுற்றுலா கைத்தொழில் துறையின் மிக முக்கியமான மையமாகவும், வரலாற்று மற்றும் தொல்பொருள் ரீதியில் பெறுமதியைக்கொண்டதும், உலக மரபுரிமையாகக் கருதப்படுகின்றதுமான காலி கோட்டை மதில், காலி கோட்டையின் உள்பகுதியிலும் காலி கோட்டையை அண்டியும் அமைந்துள்ள வரலாற்று மற்றும் தொல்பொருள் ரீதியான மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் அவற்றுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களினதும் மக்களினதும் பங்கேற்புடன் முறையான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி இந்த வரலாற்று ரீதியான மரபுரிமைகளின் உரிய பயனை நமது நாடு பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.53/ '10

கௌரவ திலங்க சுமதிபால,— கொழும்பு நகரில் மழைநீர் வழிந்தோடுவதை ஒழுங்கு முறையாக்கல்,— கொழும்பு நகரில் இன்றும் காணப்படுவது 100 ஆண்டுகளுக்கும் மேல் பழைமைவாய்ந்த நீர் வழிந்தோடும் வடிகால் தொகுதியென்பதோடு, அது ஒழுங்கான முறையில் தொழிற்படாததாலும், அரை மணித்தியாலம் தொடர்ச்சியாக பெய்யும் மழையினால் கொழும்பு நகரம் முழுவதும் நீரில் மூழ்கும் நிலை தோன்றியுள்ளதாலும் முறைசாரா விதத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள குடியிருப்புகள், கட்டடங்கள் மற்றும் அனுமதியற்ற நிர்மாணிப்புகளினால் சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாலும், கடும் மழை பெய்யும் சந்தர்ப்பதத்தில் கொழும்பு நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தினுள் ஏற்படும் வெள்ள அனர்த்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக மழைநீர் ஒழுங்காக வழிந்தோடுவதற்கு ஏற்றவகையில் சம்பந்தப்பட்ட வடிகால் தொகுதிகளை நவீனமயப்படுத்தி, சுத்தம் செய்து ஒழுங்கு முறையாக பேணிவரப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.54/ '10

கௌரவ திலங்க சுமதிபால,— மருத்துவத் துறையின் தொழில் சார் பெறுமதியினைப் பேணல்,— உள்நாட்டு, சர்வதேச மருத்துவ முறையினுள் தொழிற்தகைமை மற்றும் அனுபவத்தினைக் கொண்டிராத மருத்துவர்கள் சிகிச்சையளிப்பதில் ஈடுபட்டுள்ளமையினால், சாதாரண நோயாளர்கள் பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டி நேர்ந்துள்ளதால் பரிதாப நிலைக்கு ஆளாகியுள்ளதாதலாலும், இதன் மூலம் மருத்துவத் துறையில் பணியாற்றும் தகைமை பெற்ற தொழில்சார் மருத்துவர்கள் சமூகத்தில் அவமானத்திற்கு உள்ளாகியுள்ளதாதலாலும், மருத்துவத் துறையின் தொழில்சார் பெறுமதியினை பேணுமுகமாக, ஒழுங்காகவும் முறைசார் ரீதியிலும் சட்ட ரீதியிலும் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.55/ '10

கௌரவ திலங்க சுமதிபால,— ஊடக சுதந்திரத்தையும் தகவல் அறியும் உரிமையையும் உறுதிப்படுத்தல்,— அரசியலமைப்பின் தகவல்களை அறிவதற்கும் வெளியிடுவதற்குமுள்ள உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாலும், தொழில்நுட்பம் முன்னேறிவரும் உலகில் உண்மையை ஒழிக்கவோ மூடி மறைக்கவோ சந்தர்ப்பம் இல்லாததாலும், சனநாயக நாடொன்றில் அனைத்து பிரசைகளுக்கும் சுதந்திர ஊடகங்கள் மூலம் அறிவையும் புரிந்துணர்வையும் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.56/ '10

கௌரவ திலங்க சுமதிபால,— விளையாட்டின் மூலம் நோயற்ற சமூதாயமொன்றை உருவாக்குதல்,— பிள்ளைப் பருவத்திலேயே பிள்ளைகளை விளையாட்டில் ஈடுபடவைப்பதன் மூலம் நோயற்ற சமூதாயத்தை உருவாக்குவதற்கும், இயற்கையிலேயே திறமைகளைக் கொண்டுள்ள பிள்ளைகளை சர்வதேச மட்டத்திற்கு ஆற்றுப்படுத்துவதற்கும்/உலகப் புகழ்வாய்ந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கி நாட்டிற்கு நற்பெயரை பெற்றுக் கொள்ளும் வகையில் இன பேதமற்ற வகுப்புப் பேதமற்ற நியாயமான செயல் முறையொன்று அரச மட்டத்தில் வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.57/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேருநர் இடாப்பை அடிக்கடி இற்றைப்படுத்துதல்,— தேருநர் இடாப்பு வருடத்தில் மாதமொன்றுக்கு முப்பது நாட்களுக்கு மட்டும் இற்றைப்படுத்தும் பட்டியலொன்றாக அல்லாமல் அது அடிக்கடி இற்றைப்படுத்தும் திறந்த பட்டியலொன்றாக இருத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.59/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளோருக்கு ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்துதல்,— வெளிநாடுகளுக்குச் சென்று மிகவும் சிரமத்திற்கு மத்தியில் உழைக்கும் செல்வத்தை, இலங்கையின் செல்வத்தை அதிகரிப்பதற்காக அனுப்புகின்ற, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளவர்களை மதிக்கும் வகையில் ஓய்வூதிய முறையொன்றை பெற்றுக்கொடுத்தல் வேண்டுமேன இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.60/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்காக ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்தல், — பாராளுமன்ற உறுப்பினர்கள் 5 வருட சேவைக்காலத்தை பூர்த்திசெய்த பின்னர் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு தகைமைபெறுகின்றதனால் ஆயுதப் படைகளில் 22 வருடங்கள் பூர்த்தி செய்யாத போதிலும் 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்குப் முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்கும் ஓய்வூதியம் பெற்றுக்கொடுக்கப்படல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.62/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலது குறைந்ததும் நடமாடமுடியாததுமான நபர்களுக்கு விசேட வடிவங்களை அறிமுகப்படுத்துதல்,— சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவாறு வலது குறைந்தோரின் வசதிகளை உறுதிப்படுத்தவும் அவர்களிடமுள்ள வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும் அவர்கள் தேவையற்ற விதத்தில் பிறர்மீது தங்கிருப்பதைக் குறைப்பதற்காகவும் அரசாங்கத்தின் அனைத்து புதிய கட்டிடங்கங்களிலும் விசேட வடிவமொன்றை அமைக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.63/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்தல்,– பதிவுசெய்திருந்தும் வாக்களிப்பதற்கான வாய்ப்புக்கிடைக்காத வாக்காளர் அநேக எண்ணிக்கையானோர் இருப்பதனாலும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையை பெற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டதன் பின்னர் வாக்களிக்காத நபர்களிடமிருந்து தண்டப் பணமொன்றை அறவிவிடுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.64/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழலற்ற உலகொன்றை உறுதிப்படுத்தல்,— ஊழலை முற்றாக ஒழிப்பதற்காக இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து உலகிலுள்ள பாராளுமன்ற அமைப்புக்களில் சேர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.65/ ’10

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— காதி நீதிமன்ற முறைமைக்கு உயர்ந்த இடத்தைப் பெற்றுக்கொடுத்தல்,— 1929 ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்து கட்டளைச்சட்டத்தின் கீழ் காதி நீதிமன்ற முறைமை இலங்கையில் தாபிக்கப்பட்டு, அதன் பின்னர் 1951 இல் முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட அக்கட்டளைச்சட்டம், முஸ்லிம் குடும்பங்களில் எழுகின்ற பிணக்குகள் தொடர்பான அனைத்து விடயங்களையும் தீர்மானிப்பதற்கு உரித்தளிக்கப்பட்ட, காதி நீதிபதிகளின் தத்துவங்கள் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதோடு, முறைமையின் கௌரவத்திற்கு பொருத்தமான இடங்களில் அமர்வுகள் அத்தகைய முறையில் நடத்தப்படுவதற்கு ஏற்றவாறு காதி நீதிமன்ற முறைமையின் அந்தஸ்து தரமுயர்த்தப்பட வேண்டும் என்றும் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் காதி நீதிபதிகள் நியமிக்கப்படுவதனால் ஏனைய நீதிமன்ற அதிகாரிகளுக்கு கொடுக்கப்படக்கூடிய மதிப்புமிக்க, ஏற்றுக்கொள்ளத்தக்க சம்பள அமைப்பொன்றில் அவர்கள் வைக்கப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 69/ ‘10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏமாற்றப்பட்ட பண வைப்பாளர்களுக்கு தமது நிதிகளை மீளச் செலுத்துதல்,— போலி நிதி நிறுவனங்களில் தமது பணத்தை வைப்பிலிட்டு அதனால் ஏமாற்றமடைந்த அநேகமானோர் இருப்பதனாலும் கடந்த 2009/2010 தேர்தல் பிரசாரங்களில் இந்த அரசாங்கம் பண வைப்பாளர்கள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு அவற்றின் மிகுதிப் பணத்தை மீளச் செலுத்த வாக்குறுதி அளித்திருப்பதனாலும் மத்திய வங்கி இந்நிறுவனங்களின் பொறுப்பாளராக இருப்பதனால் மிகவும் வினைத்திறனுடன் செயற்படவேண்டுமென்பதோடு பண வைப்பாளர்களுக்கு அவர்களது மிகுதிப் பணத்தை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 71/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— சுதேச ஆயுர்வேத மருத்துவர்களுக்கு சமாதான நீதவான் நியமனங்களை வழங்கல்,— சுதேச ஆயுர்வேத மருத்துவர்கள் பணத்தையும் சிறப்புரிமைகளையும் எதிர்பார்க்காமல் அவர்களால் சமூகத்திற்கு ஆற்றப்படவேண்டிய சமூகப் பொறுப்பாகக் கருதி, குறிப்பாக கிராமிய மக்களுக்கு அளப்பெரும் சேவையை ஆற்றிவருவதனால், அச்சேவையை கௌரவிக்கும் வகையில் ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைவருக்கும் சமாதான நீதவான் பதவிகள் வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் கருதுகின்றது.

பா. 72/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— சமாதான நீதவான் பதவிகளை வழங்குவதற்கான முறையான வழிமுறையொன்றைத் தயாரித்தல்,— சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதும் சமுகத்திற்கு அளப்பரிய சேவையாற்றுவதுமான சமாதான நீதவான் பதவிகள், ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிகளுக்குப் புறம்பாக வழங்கப்படுவதன் காரணமாக அப்பதவியின் கௌரவமும் அங்கீகாரமும் படிப்படியாக குறைவடைவதனால் குறித்த நியமனங்களுக்கென முறையான வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுன்றம் கருதுகின்றது.

பா. 74/ '10

கௌரவ புத்திக பதிரண,— சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணல்,— சுனாமி அனர்த்தம் காரணமாக ஏதேனும் பிரச்சினைக்கு முகம் கொடுத்து இது வரை அப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காமல் இருப்பின், பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாவட்ட செயலாளர் பிரிவு அடிப்படையில் ஆராய்ந்து, அவர்கள் முகம்கொடுத்துள்ள அல்லது தற்போது முகம்கொடுக்கும் பிரச்சினைகளை குறைப்பதற்கான வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 75/ '10

கௌரவ புத்திக பதிரண,— வீட்டிலிருந்து தொழில் புரிவோருக்கான தேசிய கொள்கையொன்றை வகுத்தல்,— இலங்கையில் பலதரப்பட்ட தொழில் வாய்ப்புத் துறைகளில் பல தரப்பட்ட உற்பத்திப் பணிகளில் ஈடுபடும் சுமார் பத்து இலட்சம் பேர்களான வீட்டிலிருந்து தொழில் புரிவோர்களுக்காக அரசியல் அதிகாரம் வாய்ந்தோர்கள், அதனுடன் தொடர்புபட்ட சகல துறைகளினதும் தேர்ச்சிபெற்றவர்கள் புத்தி ஜீவிகள் உட்பட அரச, மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியைப் பெற்று முறையான தேசிய கொள்கையொன்றை வகுத்து அதனை துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 76/ '10

கௌரவ புத்திக பதிரண,— நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளமுடியாதுள்ள வயற்காணிகளை பயனுள்ள நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துதல்,— வயற் காணிகளை நிரப்புவதற்கான சட்டம் மீறப்படாத வகையில், ஒழுங்குமுறையான ஆய்வு ஒன்றின் மூலம் இனங்காணப்பட்டதன் பின்னர் எவ்வகையிலும் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத வயற் காணிகளில் பயனுள்ள விவசாய உற்பத்திகளை மட்டும் பயிரிடுவதற்கும், நிர்மாணப் பணிகளுக்காக எவ்வித வாய்ப்புகளும் கிடைக்காத வகையிலுமான நிகழ்ச்சித் திட்டங்களை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 77/ '10

கௌரவ புத்திக பதிரண,— அரச சேவையைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுபவர்களின் சம்பள முரண்பாட்டினை நீக்குதல்,— 2006/6 சம்பள மீள்திருத்த சுற்றறிக்கையின் பிரகாரம் 2006.06.01 ஆம் திகதியிலிருந்து அமுலாகின்றவாறு அரச ஊழியர்களுக்கு சம்பள மாற்றம் வழங்கப்பட்டமையால் 2006.06.01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற மற்றும் அதன் பின்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கிடையில் பாரிய சம்பள முரண்பாடு நிலவுவதால் அதனை நீக்குவதற்கான ஒரு தேசிய வேலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 78/ '10

கௌரவ புத்திக பதிரண,— மாவட்ட மட்டத்தில் தகவல் மத்திய நிலையங்களை நிறுவுதல்,— புவியியல் அமைவு, வரலாற்றுப் பின்னணி, பயிரிடப்படும் பயிரினங்கள், வீதி முறைமை அரச அலுவலகங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், புகையிரத நிலையங்கள் மற்றும் பேரூந்து தரிப்பிடங்கள் ஆகிய அனைத்து தகவல்களும் கணனிமயப்படுத்தப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட தகவல் மத்திய நிலையங்களை நிறுவுவதற்கும், அதன் முதலாவது கட்டத்தின் போது மகாகாண மட்டத்திலும் இரண்டாவது கட்டத்தின் போது மாவட்ட மட்டத்திலும் மூன்றாவது கட்டத்தின் போது பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச மட்டத்திலும் இந்நிலையங்களை நிறுவவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 79/ '10

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையில் அறநெறி பாடசாலைகளின் கல்வி மற்றும் நிர்வாகத்தை ஒழுங்கு முறைப்படுத்தல்,— இலங்கையில் சகல மதங்களினதும் அறநெறி பாடசாலைகளின் கல்வி மற்றும் நிர்வாகத்தை மேலும் ஒழுங்கு முறைப்படுத்துவதற்கும் பௌத்த அறநெறி பாசாலைகளில் காணப்படும் அறநெறி இறுதிப் பரீட்சை மற்றும் அறநெறி தர்மாசார்ய பரீட்சை மற்றும் சகல மதங்களினதும் அறநெறி பாடசாலைகளில் நடாத்தப்படும் இவற்றுக்கு இணையான பரீட்சைகளின் சான்றிதழ்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்குதலும், அறநெறிப் பாடசாலைக்கு தொடர்ச்சியான மனித வளங்களுடன் பௌதீக வளங்களையும் வழங்குவதன் மூலம் அறநெறிப் பாடசாலைகளுக்கு சமுகமளிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு துரித வேலைத்திட்டமொன்றை வகுத்தலும் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 80/ '10

கௌரவ புத்திக பதிரண,— நாய்கள், பூனைகள் போன்ற செல்லப் பிராணிகளை வளர்த்தல் தொடர்பான சட்டங்களை வகுத்தல்,— வீடுகளில் அல்லது விற்பனை செய்வதற்காக வளர்க்கப்படும் நாய்கள், பூனைகள் போன்ற செல்லப்பிராணிகளை உள்ளூராட்சி நிறுவனங்களில் பதிவு செய்யத் தேவையான சட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென்பதோடு, குறித்த பிராணிகளின் குட்டிகளை, சட்டரீதியான அனுமதி பெற்ற நிலையங்களில் மாத்திரம் விற்பனை செய்தல் வேண்டுமெனவும் அவ்வாறல்லாத இடங்களில் வளர்க்கப்படும் பெண்ணினப் பிராணிகளை கட்டாயமாக மலடாக்கலுக்கு உட்படுத்துவதற்கும், தேவையான சட்டங்கள் வகுக்கப்படவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 81/ '10

கௌரவ புத்திக பதிரண,— தொழில் சந்தைக்குத் தேவையான ஊழியர்களை பயிற்றுவித்தல்,— எதிர்காலத்தில் இலங்கையில் உருவாகும் புதிய தொழில் வாய்ப்புகளுக்குத் தேவையான ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் வழியொன்றைத் தொடங்கி வைக்கும் பணியை மிகவும் வினைத்திறனான வகையில், நாட்டினுள் காணப்படும் அனைத்து மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனங்களினூடாக ஆரம்பித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 82/ '10

கௌரவ புத்திக பதிரண,— பொதுநிர்வாக கட்டமைப்பை மறுசீரமைத்தல்,— தற்சமயம் பொதுநிர்வாக அமைச்சினால் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எல்லைகளை மீள நிர்ணயிப்பதற்கனான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதோடு அவ்வாறு எல்லை நிர்ணயம் செய்யப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளினூடாக புதிய பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச எல்லைகளையும் புதிய மாவட்ட எல்லைகளையும் நிர்ணயிக்க வேண்டுமெனவும், இவ்வாறு நிர்ணயிக்கப்படும் பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்கள் உள்ளூராட்சி மன்ற ஆளுகைப் பிரதேசங்களாக மாற்றியமைக்க வேண்டுமெனவும், அத்தகைய ஆளுகைப் பிரதேசத்தினுள் கோட்டக் கல்வி அதிகாரப் பிரதேசம், பொலிஸ் அதிகாரப் பிரதேசம், கமநல சேவைகள் அதிகாரப் பிரதேசம், பிரதேச சுகாதார சேவை உத்தியோகத்தர் அதிகாரப் பிரசேதம் உள்ளிட்ட சகல அரச நிறுவனங்களினதும் அதிகாரப் பிரதேச எல்லைகள் உள்ளடங்கும் வகையில் ஒட்டுமொத்தமான பொதுத்துறைக் கட்டமைப்பும் திருத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 83/ '10

கௌரவ புத்திக பதிரண,— நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை மீள ஆரம்பித்தல்,— மாத்தறை மாவட்டத்தின் நில்வளா கங்கை திட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் இடைநடுவில் முடங்கியிருப்பதால் அப்பள்ளத்தாக்கின் ஊட்டப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை விரைவில் மீள ஆரம்பிக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 84/ '10

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்களின் பிரதிநிதிகளின் பதவிக் காலத்துக்குப் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குதல்,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படுகின்ற, சமாதான நீதவான் பதவியானது, அவர்களது பதவிக் காலத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளதாலும், இப்பதவிக்காலத்தின் பின்னரும், அவர்களிடம் மேற்படி சேவையினைப் பெறுவதற்காக வரும் அநேகமானோர் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதாலும், இம் மக்கள் பிரதிநிதிகளுக்கு தமது பதவிக் காலத்தின் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குவதற்கான தகுந்ததொரு வேலைத் திட்டத்தினை வகுத்தல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 85/ '10

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் குறித்து மீளாய்வு செய்தல்,— நாட்டில் தற்போது இயங்கி வருகின்ற மாகாண சபைகள் மற்றும் எதிர்காலத்தில் ஒழுங்கு முறையாக செயற்படவுள்ள வடமாகாண சபையின், கௌரவ அமைச்சர்கள், தவிசாளர்கள், உபதவிசாளர்கள், ஆளும் கட்சியின் முதற்கோலாசான், சபைத் தலைவர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள், எதிர்க் கட்சியின் முதற்கோலாசான் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்கான முறையில் காணப்படாமையினால், இது தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து அதற்கான ஒழங்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 86/ '10

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி நிறுவனங்களின் அனைத்து மக்கள் பிரதிநிதிகளினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளை மீளாய்வு செய்தல்,— நாட்டில் நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அனைத்து மாநகர சபை, நகர சபை, மற்றும் பிரதேச சபைகளினதும் நகரபிதாக்கள், நகர சபைத் தலைவர்கள், மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள், பிரதி நகரபிதாக்கள், பிரதி நகர சபைத் தலைவர்கள், உப தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்குமுறையாக இல்லாத காரணத்த்தால் இது தொட்பாக ஆழமாக ஆராய்ந்து இதற்கான ஒழுங்குமுறையுடன் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 87/ '10

கௌரவ புத்திக பதிரண,— வடக்கு கிழக்கில் காணாமற் போன தமிழ் மக்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குதல்,— வடக்கு கிழக்கு பிரதேசங்களில் யுத்தம் நடைபெற்ற கடந்த மூன்று தசாப்த காலமாக பல்வேறு காரணங்களால் காணாமற் போயுள்ளவர்கள் தற்போது உயிர் வாழ்கின்றார்களா, இல்லையா என்பதையிட்டு துரிதமாக விசாரணை செய்து, இவர்கள் உயிருடன் இல்லாதிருப்பின் இவர்களுக்கான மரணச் சான்றிதழ்களை வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 88/ '10

கௌரவ புத்திக பதிரண,— தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல்,— அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தெரிகுழுவொன்றை நியமித்து, இலங்கைக்கு உகந்த தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல் ஆரம்பிக்கப்பட்ட வேண்டுமெனவும் அந்நோக்கத்திற்காக அதனுடன் தொடர்புடைய அனைத்துத் துறைகளும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்ச்சி பெற்றவர்கள் அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகளினதும் அதேபோன்று அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 89/ '10

கௌரவ புத்திக பதிரண,— அரசாங்க பாடசாலைகளையும், பல்கலைக் கழகங்களையும் விடுமுறை நாட்களில் கற்கை அலகுகளுக்காகப் பெற்றுக்கொடுத்தல்,— அரசாங்க பாடசாலைகளின் விடுமுறை நாட்களிலும் பிற்பகல் நேரத்திலும், பல்கலைக்கழகங்களின் விடுமுறை நாட்களிலும், அந்த நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு, வர்த்தக சமுதாயத்தினரையும், அரச சார்பற்ற அமைப்புகளையும், வர்த்தகச் சபைகளையும், சமுதாய அடிப்படையிலான அமைப்புகளையும் இணைத்துக்கொள்கின்றதான விரிவானதொரு வேலைத்திட்டமாக, முதியோர் மற்றும் முறைசாரா கற்கை அலகுகள் சலுகைக் கட்டண அடிப்படையில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 90/ '10

கௌரவ புத்திக பதிரண,— வெற்றிடமாகின்ற கிராம உத்தியோகத்தர் பதவிகளில் பதிற் கடமை புரியும் நியமனங்களுக்காக வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— கிராம உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அண்மையிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் மிகச் சிறியதொரு கொடுப்பனவின் அடிப்படையில் பதிற்கடமைக்காக நியமிக்கப்படுவதாலும், மேற்படி பதிற் கடமை நியமனத்தின் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இரண்டினதும் வினைத்திறன் வீழ்ச்சயடைவதாலும், இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர் சேர்மம் ஒன்றை அமைக்க வேண்டுமென்பதோடு, வெற்றிடம் ஏற்படுகின்ற பிரிவுகளுக்கு மேற்படி சேர்மத்திலிருந்து கிராம உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும், மேற்படி சேர்மத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்களை, பிரதேச செயலாளரினால் ஒப்படைக்கப்படுகின்ற வேறு பயனுள்ள துறைகளில் அல்லது கடமைகளில் ஈடுபடுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 91/ '10

கௌரவ புத்திக பதிரண,— தற்போது செயற்படும் சிவில் பாதுகாப்புக் குழுக்குகளுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்குதல்,— சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அமைந்துள்ள மத வழிபாட்டுத் தலங்களின் தலைமை தேரர், மதகுரு, பாடசாலை அதிபர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கமத்தொழில் ஆராய்ச்சி உதவியாளர், சனசபைச் செயலாளர்கள், பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு உத்தியோகத்தர், மற்றும் உரிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தொண்டர் அமைப்புக்கள், அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் உரிய பிரிவில் வசிக்கும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படுவதை மிகவும் எளிதாக்கும் பொருட்டு தற்போதைய சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரமொன்றை வழங்கக்கூடியவாறான பாராளுமன்றச் சட்டமொன்று நிறைவேற்றப்படுதல் வேண்டுமெனவும் அதனூடாக கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெறுகின்ற குற்றச் செயல்கள், துர்நடத்தைகள் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் சிறந்த தொடர்பைக் கட்டியெழுப்புவதற்கு இயலுமானவாறு குறித்த சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 92/ '10

கௌரவ புத்திக பதிரண,— நாட்டில் தற்பொது அமுலில் உள்ள காலங்கடந்த சட்டங்களை இற்றைப்படுத்துதல்,— தற்போதும் இலங்கையில் ஏகாதிபத்திய வழிகளின் காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட சட்டங்கள் அமுலாகிவருவதால் காலங்கடந்த தண்டனைகள், தண்டப்பணம் என்பவற்றை இற்றைப்படுத்துவதற்கான தேசிய வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 93/ '10

கௌரவ புத்திக பத்திரண,— தேர்தல்ள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்துதல்,— இலங்கையில் 1988 இல் இருந்து 2010 வரையான 22 வருட காலப்பகுதிக்குள் 1990, 1992, 1995, 1996, 1998, 2003, மற்றும் 2007 ஆம் ஆண்டுகளைத் தவிர்ந்த ஏனைய ஒவ்வோர் ஆண்டிலும் ஏதேனும் ஒரு தேர்தல் நடத்தப்பட்டுள்ளதோடு அவ்விதமாக தேர்தல்களை நடத்துதலானது மக்களின் அபிப்பிராயத்தைக் கண்டறிவதற்கான பெறுமதி மிக்க அளவுகோலாக அமைந்த போதிலும், இதன் மூலமாக நாட்டின் பொருளாதாரம், நிருவாகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் தீவிரமான தாக்கம் ஏற்படுத்தப்படுவதால் உள்ளூராட்சித் தேர்தல்கள், பொதுத்தேர்தல்கள் மற்றும் சனாதிபதித் தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கேதுவாக மேற்படி நிறுவனங்களின் பதவிக் காலத்தை திருத்தியமைக்கவும் பொருத்தமான தேர்தல் வழிமுறையொன்றை உருவாக்கவும் தகுந்தவாறு அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 94/ '10

கௌரவ புத்திக பதிரன,— பாராளுமன்ற சனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல்,— நாட்டினுள் சனநாயகத்தை மேலும் வலுவூட்டும் நோக்கத்துடன் பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கிடையிலும், மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையிலும் சிறந்த இணைப்பினை பேணிவருதல் அத்தியாவசியமாயுள்ளதோடு, இதற்கு உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மாகாண சபைகளில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதிசெய்வதற்கும் மாகாண சபை தலைவர்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதி செய்வதற்குமான செயல்முறையொன்றை தயாரிப்பதற்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தமொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 95/ '10

கௌரவ புத்திக பதிரன,— தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் சிங்கள மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் சிங்கள மொழி பேசுகின்ற மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும், அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அரச மற்றும் தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் மட்டுமன்றி அச்சு ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொண்டு இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 96/ '10

கௌரவ புத்திக பதிரண,— வாழ்க்கைத் துணையின் தகாத செயல்களினால் நிர்க்கதிக்குள்ளாகும் தரப்பினருக்கு நிவாரணமளித்தல்,— திருமணமான கணவன் மனைவி தம்பதிகள் ஒரே வீட்டில் வாழ்கின்ற சந்தர்ப்பங்களில் கணவன் அல்லது மனைவி மதுபாவனை சூதாட்டம் அல்லது வேறு துர்நடத்தைகளில் ஈடுபட்டு, காணி, வீடு அல்லது வீட்டுப் பாவனைப் பொருட்களை தனது தற்றுணிபின் பிரகாரம் விற்பதன் காரணமாக அல்லது வேறு நபர்களுக்கு ஒப்படைப்பதன் காரணமாக மற்றைய தரப்பினருடன் பிள்ளைகளும் கடும் நிர்க்கதி நிலைக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்களில் அந்நிலைமையை தடுப்பதற்குத் தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 98/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஒழுக்க நெறிகள் பற்றிய குழுவை தாபித்தல்— இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நம்பகத்தன்மையையும் அவர்களிடத்தில் உயரிய ஒழுக்க நெறிகளையும் பேணவேண்டிய தேவைப்பாட்டைப் பற்றி ஆராய்வதற்காக ஒழுக்க நெறிகள் பற்றிய குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 99/ '10

கௌரவ புத்திக பத்திரண,— புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்குதல்,— நிர்வாகத்தை எளிதாக்குதல், குற்றங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஏனைய மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் குறைப்பதற்காக, குறித்த நபரின் இரத்தப் பிரிவு, வங்கிக் கணக்குகள், கடன் அட்டை, கல்வித் தகைமை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வெளிநாட்டுப் பிரயாண கடவுச்சீட்டு இலக்கம் ஆகிய முக்கியமானதும் தேவையானதுமான தகவல்களை உள்ளடக்கிய புதிய இலத்திரனியல் இலக்கத்துடனான, தேசிய அடையாள அட்டையொன்று வழங்கப்படுதல் வேண்டும் எனவும், பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் அனைவரது தகவல்களையும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் கணனிமயப்படுத்தலை துரிதப்படுத்தல் வேண்டும் எனவும் இத் தகவல்கள் அவ்வப்போது இற்றைப்படுத்தப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 100/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், ஓய்வு பெறுவதற்கு வாய்ப்பளித்தல்,— பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், சுயவிருப்பில் ஓய்வு பெறுவதற்கான இயலுமானது, ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டுமென்றும் அதற்கான செயல்முறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 101/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஒழுங்குவிதிகளை நீக்குவதற்கான குழுவை தாபித்தல்,— ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படுவதும் நீக்கப்படுவதும் அன்றாடம் இடம்பெறும் நடைமுறையாதலால், காலம் கடந்த ஒழுங்குவிதிகளை நீக்குவது பற்றி ஆராய்வதன் பொருட்டு ஒழுங்கு விதிகளை நீக்குவதற்கான குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 102/ '10

கௌரவ புத்திக பதிரண,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களை, சேவையில் நிரந்தரமாக்கல்,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்கத்தின் ஏனைய பாதுகாப்புப் பிரிவுகளில் மற்றும் திணைக்களங்களில் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு உள்ளதைப் போன்று சம்பளம், கொடுப்பனவு, நிரந்தர சேவை மற்றும் ஓய்வூதியத்துடனான உத்தியோக அந்தஸ்து வழங்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 103/ '10

கௌரவ புத்திக பத்திரண,— உறுதியளித்தல் பற்றிய குழுவை தாபித்தல்,— பாராளுமன்றத்தில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளாக அரசாங்கம் வழங்கும் உறுதி மொழிகளும் அரசாங்கத்தின் கடப்பாடுகளும் மீறப்படுகின்ற பல சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாயுள்ளதால் அரசாங்கம் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதையும் அவை தொடர்பில் பொறுப்புக் கூறுவதையும் உறுதி செய்யும் பொருட்டு உறுதியளித்தல் பற்றிய குழுக்களை தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 104/ '10

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பனை மர விளைச்சலுக்கு ஊக்கமளித்தல்,— "கற்பகதரு" எனஅழைக்கப்படும் பொதுமக்களுக்கு மிக்க பயனைப் பெற்றுத்தரும் பனை மர விளைச்சலுக்கு ஊக்கமளித்து பனைப் பொருள் அபிவிருத்திக்காய் அனைத்து நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென இச்சபை தீர்மானிக்கின்றது.

பா. 105/ '10

கௌரவ புத்திக பத்திரண,- புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்,- இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் உள்ள அனுமதியற்ற கட்டுமானங்களையும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களையும் துரிதமாக அப்புறப்படுத்தி சட்டரீதியான கட்டுமானங்கள் தொடர்பான உடன்படிக்கைகளை மீளாய்வுக்குட்படுத்துவதன் மூலம் திணைக்களத்திற்கு கிடைக்கும் வருமானங்களை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதுடன், திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தாத காணிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கி, அந்நிதியை புகையிரத வலைப்பின்னலின் நவீனமயமாக்கலுக்கு பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.108/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பிச்சைக்காரர்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— தற்போது பிச்சைக்காரர்களின் வாழ்வுக்கு பாரியளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவர்களது வாழ்வைப் பேணிக்காக்கும் பொருட்டு, அவர்களுக்கு பயிரிடுவதற்கான காணிகளை வழங்கி அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தில் அவர்களது வாழ்வின் பாதுகாப்பினையும் போசனையையும் உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.109/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுப்பதற்காக முறையியலொன்றைத் தயாரித்தல்,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுக்கும் நோக்கத்தோடு, அரசாங்கம் நிலப் பரப்பொன்றை ஒதுக்கி கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களை அவ்விடத்திற்குக் கொண்டுசென்று அவற்றைப் பராமரிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.110/ '10

கௌரவ புத்திக பத்திரண,— சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் கடுமையான தண்டனைகளை விதித்தல்,— நாடு முழுவதிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் சடுதியாக அதிகரித்துவரும் நிலைமை ஏற்பட்டுள்ளதால், அது தொடர்பாக தற்போதுள்ள சட்ட விதிகள் போதியதாக இல்லாதிருப்பின், புதிய சட்ட விதிகளை புதிதாக நிறைவேற்றி மிகவும் துரிதமாக இது தொடர்பான வழக்குகளை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.111/ '10

கௌரவ புத்திக பத்திரன,— சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக கரையோர நுழைவுப் பாதைகளை அமைத்தல்,— நாட்டின் கரையோர வலயத்தில் துரிதமாக இடம்பெறுகின்ற நிர்மாணங்கள் காரணமாக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் கடற்கரைக்கு பிரவேசிப்பதில் அசௌகரியம் ஏற்படுதலானது, சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கும் கடற்றொழிலை மேற்கொள்வதற்கும் தடைகளை ஏற்படுத்துவதனால், இந்நிலமையை தடுப்பதற்கும் இத்துறைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டும் கடற்கரை நுழைவுப் பாதை முறைமையொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.112/ '10

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குதல்,— அதிபர் சேவை, ஆசிரியர் சேவை, கல்வி நிருவாக சேவை ஆகிய சேவைகளில் பாரிய சம்பள முரண்பாடுகள் நிலவுவதால் இந்நிலைமையை போக்கி இவர்களின் சுய கௌரவத்திற்கு உகந்ததொரு சம்பளத்தைக் கிடைக்கச் செய்யும் வகையில், சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்குரிய முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.113/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பௌத்த பிக்குக் கல்வியை மேம்படுத்துதல்,— பௌத்த பிக்குமார்களின் மத அறிவை மேம்படுத்தும் நோக்கத்தோடு அவர்களின் பேச்சாற்றல், செவிமடுக்கும் ஆற்றல், கனணி, உளவியல் மற்றும் ஆலோசனை பற்றிய அறிவு என்பவற்றை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள பிக்குக் கல்வி நிறுவனங்களுக்குப் புறம்பாக இப்பணிக்ளுக்கே ஒதுக்கப்பட்டதான பிக்குக் கல்வி நிறுவனங்களை உருவாக்குவதற்கான முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.114/ '10

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவையை இற்றைப்படுத்துதல்,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவை காலங்கடந்த சட்டங்களைக் கொண்டுள்ளதால் அது தொடர்பாக மீள பரிசீலனை செய்து தற்காலத்திற்குப் பொருத்தமானவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.115/ '10

கௌரவ புத்திக பத்திரன,— உலர் வலய சேனைப் பயிர்செய்கையாளர்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— உலர் வலயங்களில் சேனைப் பயிர்செய்கையாளர் களால் பயிரிடப்படுகின்ற நெல், குரக்கன், பயறு, எள்ளு ஆகிய பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்கும் உற்பத்திப் பொருட்களை பதனிடுவதற்கும் ஏதுவான வகையில் புதிய தொழிட்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் தரச்சிறப்புவாய்ந்த வகையில் உற்பத்திகளை பதனிடுவதற்கும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நடவடிக்கையை வலுவூட்டுவதற்கும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு கம்பனிகள் தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.116/ '10

கௌரவ புத்திக பதிரண,— ஆசிரியர் ஆலோசனை சேவையை உருவாக்குதல்,— இலங்கையில் கல்வித் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு இற்றைக்கு சுமார் இருபது (20) வருடங்களுக்கு முன்னர் தொட்டு ஆரம்பமாகி நடைமுறையிலிருக்கும் ஆசிரியர் ஆலேசானை சேவையை தனியானதொரு சேவை அலகாக தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.117/ '10

கௌரவ ருவண் ரணதுங்க,— உப பிரிவாக்கல் தடை செய்யப்பட்டுள்ள அரசாங்க அளிப்பு பத்திர காணிகளின் உப பிரிவாக்கல் அதிகாரத்தை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைத்தல்,— ஜய பூமி, சுவர்ண பூமி,ரத்ன பூமி ஆகிய அரசாங்கக் காணி அளிப்புப் பத்திரங்களைக் கொண்டுள்ளவர்களின் காணிகளில் உப பிரிவாக்கல் தடை செய்யப்பட்டுள்ளதெனினும், ஆரம்பக் காணி பெற்றவர்களின் இரண்டாம் பரம்பரையின் உரிமையை உறுதி செய்வதற்கும் அவர்களின் வீடு, தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் உப பிரிவாக்கலுக்கான தேவை தோன்றும் போது மாகாண ஆணையாளர், காணி ஆணையாளர் மற்றும் ஜனாதிபதி செயலகத்துடனான தற்போது நடைமுறையில் உள்ள நீண்ட செயன்முறையை குறுகியதாக்கி உப பிரிவாக்க அதிகாரத்தை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைப்பதற்கு தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.118/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கோதுமை மாவிற்குப் பதிலாக அரிசி மாவை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்,— கோதுமை மாவிற்காக வெளிநாடுகளுக்கு வெளிப் பாய்ச்சப்படும் பெருமளவு செலாவணியை நிறுத்தும் நோக்கத்துடன், மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய அரிசி மாவினால் தயாரிக்கப்படும் உணவை பிரபல்யப்படுத்துவதற்கும், நார்த்தன்மை கொண்ட தானிய வகையான அரிசியை மிகவும் மென்மையானதாக கோதுமை மாவைப் போன்று அரைப்பதற்கும், கோதுமை மா அரைப்பதற்கு பயன்படுத்தப்படுவதைப் போன்ற இயந்திர உபகரணங்களையும் புதிய தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.119/ '10

கௌரவ புத்திக பத்திரண,— யுத்தத்தால் அங்கவீனமுற்றவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— ஏறக்குறைய 30 வருடகாலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக அன்றாடம் நாட்கூலிக்கு வேலை செய்து வாழ்ந்த மக்கள் மற்றும் நிரந்தர தொழில் புரிந்த மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் உடலுறுப்புக்களை இழந்து அங்கவீனர்களாக வாழ்க்கைச் சுமையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி நிர்க்கதியான நிலையில் வாழ்வதால், அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.120/ '10

கௌரவ புத்திக பத்திரண,— உயர் பிரமுகர்களின் பாதுகாவலர்கள் அனைவருக்கும் பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குதல்,— ஜனாதிபதி பாதுகாப்புச் சேவை மற்றும் பிரதம அமைச்சர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களைப் போன்று ஏனைய உயர் பிரமுகர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் சமமான பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.122/ ’11

கௌரவ ருவன் ரணதுங்க,— அரசாங்க வங்கிகளின் வட்டி செலுத்துதலுக்கும் வட்டி அறவிடலுக்கும் இடையே காணப்படுகின்ற வித்தியாசத்தைக் குறைத்தல்,— அரசாங்க வங்கிகளில் சாதாரண வைப்புகளுக்கு செலுத்தப்படுகின்ற வட்டி விகிதம் 4 % முதல் 4.5 % வரையிலும் நிலையான வைப்புகளுக்கு செலுத்தப்படுகின்ற வட்டி விகிதம் சுமார் 8 % ஆகவும், வங்கிகளால் வீடமைப்பு, வர்த்தகம் மற்றும் விவசாயக் கடன்களுக்கு அறவிடப்படுகின்ற வட்டி விகிதம் சுமார் 12% முதல் 13% வரையிலும் உள்ளதால், மக்களுக்கும் சிறிய அளவிலான வர்த்தகர்களுக்கும் கைகொடுப்பதற்கும் அவர்களை ஊக்குவிப்பதற்குமாக, இவ்வாறு அறவிடப்படுகின்ற வட்டிக்கும் செலுத்தப்படுகின்ற வட்டிக்கும் இடையிலான வித்தியாசத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.123/ ’11

கௌரவ ருவன் ரணதுங்க,— பட்டதாரி கிராம உத்தியோகத்தர்களை கௌரவிப்பதற்கான ஒரு கொடுப்பனவைச் செலுத்துதல்,— அரசாங்க சேவையை கிராமிய மட்டத்தில் மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக சேவையாற்றுகின்ற கிராம உத்தியோகத்தர்கள் க.பொ.த. (உ/த) பரீட்சையின் பின்னர் போட்டிப் பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள போதிலும், தற்போது சேவையாற்றி வருகின்ற கிராம அலுவலர்களில் சுமார் 30 % முதல் 40 % வரையிலானோர் பட்டத் தகைமைகளைப் பெற்றுள்ளனராதலாலும், இதற்கென எவ்வித விசேட கவனமும் இதுவரை செலுத்தப்படாதுள்ளதனாலும், பட்டத் தகைமையை கௌரவிக்கு முகமாக பட்டதாரி கிராம அலுவலர்களுக்கு சம்பள அதிகரிப்பு அல்லது கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.124/ ’11

கௌரவ ருவன் ரணதுங்க,- கல்விசார் நூல்கள் தவிர்ந்த தினசரி பத்திரிகைகளிலும் வாராந்த சஞ்சிகைகளிலும் புத்தர் பெருமானின் உருவப் படங்கள் பிரசுரிக்கப்படுவதை தடைசெய்தல்,- தினசரி பத்திரிகைகள் மற்றும் வார சஞ்சிகைகளில் புத்தர் பெருமானின் உருவப் படங்களும் சிலைகளின் படங்களும் எதுவித கட்டுப்பாடுமின்றி எல்லையற்ற வகையில் அச்சிடப்படுவதோடு அந்த அட்டைகள் பல்வேறுபட்ட பொருட்ளின் உறைகளாகவும் வேறு பொருத்தமற்ற அலுவல்களுக்காகவும் பயன்படுத்தப்படுவது புத்தர் பெருமானுக்குச் செய்கின்ற அவமரியாதையாகுமென்பதால் 2600 ஆம் புத்தர் ஜெயந்தி கொண்டாட்டத்தையும் கருத்திற்கொண்டு இதன் பின்னர் கல்விசார் நூல்கள் தவிர்ந்த தினசரி பத்திரிகைகளிலும் வாராந்த சஞ்சிகைகளிலும் புத்தர் பெருமானின் உருவப் படங்கள் பிரசுரிக்கப்படுவதை தடைசெய்வதற்குத் தேவையான சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.